உ

பொங்கல் பண்டிகை

அல்லது

0:2:56

சபாபதி (இரண்டாம் பாகம்)

இந்த தமிழ் நாடகம்

ராவ் சாஹெப்

ப. சம்பந்த முதலியார், பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

(இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்:— "லீலாவதி-சுலோசனை," "கள்வர் தலைவன்," "மனோஹரன்," "இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்," "சத்ருஜித்," "யயாதி," "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்," "காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி," "மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்," "விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "வேதாள உலகம்," "வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்," "ரத்னாவளி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "காலவரிஷி," "பிரஹசனங்கள்," "ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்," "முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்," "வள்ளி மணம்," "சபாபதி," "புத்த அவதாரம்" முதலியன.) :: :: ::

முதல் பதிப்பு

சென்னை:

டௌடன் கம்பெனியாரின்

"பியர்லெஸ்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

[காபிரைட்.]

[விலை அணா 8.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL

and

MY FRIEND

C. RANGAVADIVELU

PREFACE

If the popularity of a book is to be judged by the demand for it, this book must be very popular for there has been a persistant demand for it ever since I published Sabapathy Part I in 1918.

For small Evening-Parties Scenes 1 & 2 may be acted together, or Scene 3 seperately.

Once again I would invite the attention of all concerned to the fact that my previous permission must be obtained before staging this or any other drama of mine.

"PAMMAL LODGE"
MADRAS
15th Nov. 1923.

THE AUTHOR.

நாடக பாத்திரங்கள்

சபாபதி முதலியார் ...	...	கதா நாயகன்
சபாபதி ...	...	சபாபதி முதலியார் வேலையாள்
கிருஷ்ணசாமி ...	...	சபாபதி முதலியாரின் மைத்துனன்
விஸ்வநாத ஐயர் ...	...	ஆவடி சத்திரத்து பிராம்மணன்
தினகரசாமி நாயுடு ...	...	ஓர் ஜமீன்தார்
ராமன் ...	...	கிருஷ்ணசாமியின் வேலையாள்
பேல்லியப்ப கவுண்டன்	...	ஓர் வியவசாயக்காரன்
துப்பையர் ...	...	ஓர் பாடகர்
அமிர்தலிங்க ஜோஸ்யர்	...	ஓர் ஜோஸ்யர்
சிதம்பரத்தடிகள் ...	...	ஓர் பண்டாரம்
வெற்றிவேற் கவிராயர்	...	ஓர் கவிராயர்
திப்புசாமி முதலியார்	...	ஓர் வயித்தியர்
ராம்ஜி ...	...	ஓர் குடுகுடுப்புக்காரன்

கதை நிகழிடம் :—ஆவடியில் ஓர் சத்திரத்திலும், கோளப்பஞ்சேரியில் சபாபதி முதலியார் மாமனார் வீட்டிலும்.

பொங்கல் பண்டிகை

அல்லது

ச பா ப தி (இரண்டாம் பாகம்)

முதல் அங்கம்

முதல் காட்சி

இடம்—ஆவடியில் ஓர் சத்திரம். காலம்—ராத்திரி.

சபாபதி முதலியார் திண்ணையின்மீது உட்கார்ந்துகொண் டிருக்கிறார்.

சபாபதி அருகில் நின்றுகொண்டு வெற்றிலை மடித்துக் கொடுத்துக்கொண் டிருக்கிறான்.

சத்திரத்து பிராம்மணன் விஸ்வநாத ஐயர் எதிரில் நின்றுகொண் டிருக்கிறான்.

ச-ஐ. சாப்பாடெல்லாம் எப்படி யிருந்ததோ ?

ச-மு. வெறி எக்செலென்ட்! (very excellent) பஷ்ட்கிளாஸ (first class) யிருந்தது !—பொங்கல் விருந்து இண்ணைக்கே ஆரம்பிச்சூட்டுது இண்ணு நெனேச்சே ! றெயில் தப்பிப்போனது ஒருவிதத்துலெ நல்லதாச்சி, இல்லாப் போனு இந்த சாப்பாடு கிடைச்சிருக்குமா ?—ஏண்டா சபாபதி, உனக்கெப்படி யிருந்துது ?

ச. அல்லாம் நண்ணு யிருந்துது அப்பா, ஒண்ணு தான் கொஞ்சம் வேகாதெ யிருந்துதப்பா.

ச-மு. அதென்னடா அது ? என்ணு வேகாதெ யிருந்துது ?

ச. சாதத்துலே யிருந்துதே கல்லு, அது வேகவே யில்லெப்பா, எவ்வளவோ கடிச்சிப் பாத்தேன்.

ச-பி. அது—கொஞ்சம்—மொதலியார் மன்னிச்சிக்கணும் !—ஆத்துலெ அம்மா களஞ்சி போட்டா—கண்ணு கொஞ்சம் சாலேஸ்ரம்—இருட்லெ—

ச-மு. நெவர் மைன்ட் ! (never mind) பரவா யில்லே, அதனாலே ஒண்ணும் தப்பில்லே. இவன் படிக்காத முட்டாளுங்கோ ! — அதாம் அப்படி அத்தெ யெடுத்துச் சொன்னான்,—

ச. ஏம்பா ! படிப்புக்கும் இதுக்கும் என்னப்பா சம்பந்தம் ? இருந்ததெ எடுத்து சொன்ன— சும்மா கோவிச்சிக்கரையே—

ச-மு. அடே அதனப் பிரசங்கி ! வாயெ மூடு— ஆத்திச்சூடி படிச்சிருக்கராயாடா நீ ?

ச. படிச்சேம்பா சின்னபோது.

ச-மு. அதுலெ 'இளமையிற் கல்' இண்ணு இருக்குதே, அதுக்கு அர்த்தம் தெரியுமா ?

ச. அதெல்லாம் எனக்கு காபகம் இல்லேப்பா, அப்பவே வாத்தியாருக்கு ஒப்பிச்சூட்டேம்பா.

ச-மு. ஸ்டுபிட் சாப் ! (stupid chap) இளமையிற் கல் இண்ணு, இளமையிலே கல் சாப்பிடணும் இண்ணு சொல்லியிருக்குது, ஆகையினாலே அதெல்லாம் தப்புண்ணு சொல்லக் கூடாது.—நேரமாச்சு, ஐயர், நீங்க சாப்பிட போங்க, நானும் சீக்கிரம் படுத்துக்கணும், காலமே எழுந்திருக்கவேண்டிய திருக்குது.

ச-பி. எங்கே படுத்துக்கப் போரைக ?

ச-மு. இங்கே காத்தோட்டமாயிருக்குது, வெளியிலேயே படுத்துக்கரேன்.

ச-பி. இல்லெ—கொஞ்ச நாளா இங்கே திருடர் பய முண்டு, அதுக்காக கேட்டேன்.

ச-மு. நீங்க அதுக்கெல்லாம் பயப்படாதைங்க.—எங்கிட்ட ரிவால்வர் (revolver) இருக்குது, ஒருதரம் சுட்டேண்ணு, ஆறு பேர் பணல் (fanal), அது சிக் சேம்பர் ரிவால்வர் (sick chamber revolver).

ச-பி. ஆனு உங்க இஷ்டம்—நான் வர்ரேன்—காலமே வந்து எழுப்பவா ?

ச-மு. அதெல்லாம் வாணும் உங்களுக்கு கஷ்டம்—எங்கிட்ட ஒரு அலாரம் டைம்பீஸ் (alarum time piece) ஒண்ணு கொண்டு வந்திருக்கிறேன், அது என்னெ எழுப்பிடும்.

ச-பி. ஆனு—நான் உத்தரவு பெத்துகரேன். [போகிறுன்.]

ச-மு. சபாபதி—படுக்கெ போட்ரா சீக்கரம்.

ச. இதோ போட்ரேம்பா—ஆ!—அதென்னுப்பா அது?—என்னமோ உன்னெ எழுப்பூம் இண்ணையே ?

ச-மு. அதெல்லாம் ரகஸ்யம் உனக்கு சொல்லக் கூடாது.

ச. அப்பா ! அப்பா !—கொஞ்சம் சொல்லி உடுப்பா.

ச-மு. சொல்லமாட்டேன்—அத்தெ ஒணும்ணு உனக்கு காட்ரேன். என் பாக் (bag) கொண்டா.

ச. இதோ அப்பா. [பையைக் கொண்டு வந்து கொடுக்கிறுன்.]

ச-மு. [அதிலிருந்து ஒரு பெரிய கடியாரத்தை எடுத்து] இத்தெ பாத்தையா ?

ச. ஏ ! இத்தானுப்பா?—கடியாரம்—எனக்கு தெரியாதோ ?

ச-மு. வெறும் கடியாரமா இது ! ஸ்டுபிட் சாப் ! (stupid chap) இதும் சமாசாரம் உனக்கு ஒண்ணும் தெரியாது. இதுங்கிட்ட என்னெ நாலு மணிக்கு காலமெ எழுப்புண்ணு—சரியா நாலு மணிக்கு எழுப்பிடும்—தெரியுமா ? எய்டி போர் ருபீஸ் எ டஜன் (eighty-four rupees a dozen) இதும் வெலெ !

ச. இதுவா எழுப்பும் ?— என்னுப்பா, உன்னெப்போலெ என்னேயும் முட்டாள் இண்ணு நெனச்சிக்கினையா ?

ச-மு. டாம் பூல் ! (damn fool) ஏண்டா ! என்னையா முட்டாள் இண்ரே ?

ச. இல்லேப்பா ! இல்லேப்பா ! நீ கோவிச்சிகாதே ! உன்னெ யாரோ ஏமாத்திட்டான், ரொம்ப வெலெ குடுத்து வாங்குட்டே, இண்ணு சொல்ல வந்தேம்பா.

ச-மு. சரிதான்—நீ சீக்கிரம் படுக்கையெ போடு.

ச. ஏம்பா—இதோ நானும் படுத்துக்ரேன்—கொஞ்சம் இத்தெ எழுப்பச் சொல்லப்பா என்னே.

ச-மு. அதெல்லாம் முடியாது இப்போ—சரியா நாலு மணிக்கு காலமெ என்னெ எழுப்பச் சொல்ரேம் பார்—கடியாரம்! சரியா நாலு மணிக்கு எழுப்பு. [சாவி கொடுக்கிருர்.]

ச. அதென்னுப்பா என்னமோ முடிக்கணேயே ?

ச-மு. அதெல்லாம் ரகசியம்—உனக்கு சொல்லக்கூடாது.

ச. நான் கொஞ்சம் முடிக்கிப் பார்க்கிரேம்பா ?

ச-மு. சத், நான்சென்ஸ் ! (nonsense) தொடாதே அத்தெ, இப்பவே சொன்னே. இத்தெ என்னமாரு தொட்டையா—அது சொல்லிபுடும் ! பத்திரம். முன்னெ ஒரு தரம் சொல்லிட்டுதே காபகம் இருக்குதா ? ஜாக்கிரதை. —அந்த வெளக்கெ கொண்டாடா இப்படி.

[திண்ணையின்மீது வைக்கிருர்.]

அடே இதென்னடா ! இங்கே போர்டு (Board)

[படித்துக்கொண்டே.]

"விஸ்வநாதையர் சத்திரம்—பிராம்மணர்—கள் சாப்பிடுமிடம்"—வாட் நான்சென்ஸ் ! (what nonsense) பிராம்மணர் கள் சாப்பிடு மிடத்திலேயா நம்பளுக்கு சாப்பாடு போட்டாங்க !—நான் போயி அந்த பாப்பானெ கேக்கரேன் ! [உள்ளே விரைந்து போகிருர்.]

[படுக்கையைப் போட்டுவிட்டு] பூட்டாரு ஐயா ! இதாம் சமயம்—ஏ ! கெடியாரம் ! என்னெகூட எழுப்பரையா ?

சரியா மூணு மணிக்கி காலமெ என்னெ எழுப்பணும். காபகம் இருக்குமா? அப்பாவெ எழுப்பரத்துக்கு முன்னெ எழுப்பிவுடு.—என்ன, பதில் சொல்லக் காணம்?

[அதைக் கையிலெடுத்து]

ஒறும் கடியாரம்! இது எங்கையாறு எழுப்புமா?—என்னமோ சாவி கொடுத்தாரே இதுக்கு—நம்பளும் சாவி கொடுப்போம்.

[அலாரம் கொடுக்கும் முள்ளைத் திருப்பி, கடியாரம் அலாரம் அடிக்கிறது.]

ஐ ஐயோ! சொல்லாதே சொல்லாதே!—நான் தொடலெ தொடலெ, இனிமேலே!—நீ என்னெ எழுப்பாப் போறு போவுது, அப்பா கிட்ட சொல்லாதெ!—தோப்பளம் போடரேன் தோப்பளம் போடரேன்! சொல்லாதே சொல்லாதே அப்பாகிட்ட சொல்லாதே!—

ச-மு. [உள்ளிருந்து] அடே சபாபதி!

ச. ஐ ஐயோ! அப்பா வந்துடராரே!—உன்னெ வேண்டிக்கரேனே கும்பிடரேனே! நீ கோவிச்சிக்காதே!—சொல்லூடாதே! சொல்லூடாதே—இன்னும் சொல்லரையா! உன்னெ கொன்னூடரேம் பார்!

[துணியைப் போட்டு மூடுகிறான், பிறகு அதன்மீது ஒரு கூடையைப் போட்டு மூடி அதன்மீது உட்கார்ந்து கொள்ளுகிறான்.]

சபாபதி முதலியார் வருகிறார்.

ச-மு. ஏண்டா! திருடா! நான் எத்தனி தரம் சொல்லி யிருக்கரென் அத்தெ தொட்டா சொல்லி உடும் இண்ணு! எங்கேடா கடியாரம்?

ச. இல்லேப்பா! இல்லேப்பா! நான் தொடலெப்பா! தொடலெப்பா!

ச-மு. பொய் பேசாதே கழுதெ! அதோ! இன்னம் சொல்லுதே அது.

ச. [அழுதுகொண்டே] அது பொய் பேசுதப்பா! பொய் பேசுதப்பா! நான் என் கையாலெ தொடலேப்பா!

ச-மு. சத்! எழுந்திரு கழுதே! அது இருக்கர எடம் கூட எனக்கு சொல்லுது! [சபாபதி எழுந்திருக்கிருன்.]
போதும்! [அலாரத்தை நிறுத்திவிடுகிருர்.]
அடே! பாத்தையா! இனிமேலெக்காவது பீத்திரம், இத்தெ தொட கிட போரே!—அடே, நீயும் ஒரு பக்கமா படுத்துக்கோ, சீக்கிரம் காலமே எழுந்திருக்கணும்—அடெ, அந்த ரிவால்வர் (revolver) எங்கே?

ச. இதோ பையிலெ வைக்கச் சொன்னயேப்பா.
[பையை எடுத்துக் கொடுக்கிருன்.]

ச-மு. அத்தெ சேஷ்டை பண்ணப்போலெ இத்தையும் சேஷ்டெ பண்ணப்போரெ. [அதை வெளியில் எடுத்து]
குண்டுங்க எங்கேடா?

ச. ஊட்லெ இருக்குதப்பா.

ச-மு. ஊட்லே இருக்குதா!—ஏண்டா? இத்தோடெ வைக்கச் சொன்னேனே?

ச. இல்லேப்பா, முன்னெ வைச்சேன். அப்பறம் பையெ தூக்கிப் பாத்தா ரொம்ப பளுவா இருந்துதுண்ணு ஊட்லெ வைச்சூட்டு வந்தூட்டேம்பா.

ச-மு. வாட் டாம் இடியட் (what damn idict!) ஊட்லெ வைச்சூட்டு வந்தையா!—இப்பொ இத்தெ என்னமாடா சுடரது?

ச. இதுக்காப்பா இல்லாத கோவம் கோவிச்சிகரே?—எங்கிட்ட கொடுப்பா—அடுப்பலே போட்டு சுட்டு கொண்டாந்தூடரேம்பா ஒரு நிமிஷத்லே.

ச-மு. சத்! கழுதை மகனே! வாயை மூடு! ரிவால்வரையாடா அடுப்புலெ போட்டு சுடரது? குண்டில்லாதெ என்னமாடா சுடரது இத்தே?

ச. அதுவா ? அது சர்தாம்பா—எம்பேர்லெ தப்பு, ஒப்பு கரேன்—ஒண்ணு மாத்திரம் உன்னெ கேட்டுக்ரேம்பா—என்னெ எவ்வளவு ஒணும்ணாலும் திட்டு, எங்க அப்பாவெ மாத்ரம் திட்டாதெ அப்பா.

ச-மு. உங்க அப்பாவெ எங்கேடா திட்டனேன் நானு ?

ச. கொஞ்சம் முன்னெ கழுதை மகனே இண்ணு சொன்ன யேப்பா என்னே !

ச-மு. ஹ ! அதுவா ! [சிரிக்கிறார்.]

ச. அப்படி தான் சிரியப்பா, நீ சிரிச்சாகா தான் உம் மூஞ்சி அழகாயிருக்குதப்பா—கோவிச்சிக்காதே அப்பா.

ச-மு. கோவிச்சிகரு என்னமாடா இருக்குது ?

ச. உம்—அப்புறம் நானு சொன்ரு நீ கோவிச்சிக்கக் கூடாது.

ச-மு. இல்லெ சொல்.

ச. நீ கோவிச்சிக்கருகா—கொரங்காட்ட இருக்குதுப்பா மூஞ்சி !

ச-மு. [சிரித்து] ஏண்டா ! அதனப் பிரசங்கி !—ஆனாலும் நீ சொல்வது என்னமோ கொஞ்சம் வாஸ்தவந்தான்.

ச. கொஞ்சம் என்னுப்பா— நீ இனிமேலே எப்பவானு கோவிச்சிக்கரு ஒரு கண்ணடி எடுத்து காட்ரேன். அப்போ என்னமா இருக்குது பாரப்பா.

ச-மு. அப்படியே காட்டு—அதிருக்கட்டும் எனக்கு தூக்கம் வருது —அடே சபாபதி, அந்த சத்தரத்து பாப்பான் இங்கே திருடர் பயம் இருக்குது ஜாக்கிரதையா யிருங்க இண்ணு—நம்ப ரெண்டுபேரும் தூங்கரு தப்பு, நம்போ மாத்தி மாத்தி முழிச்சிக்கினு இருக்கலாம். நான் இப்போ தூங்கரே, கொஞ்சநேரம் பொறுத்து முழிச்சி கினேண்ணு, அப்புறம் நீ தூங்கு. அப்படி அப்படி மாத்திக்கலாம்—

ச. அப்படியே ஆவட்டும்பா—நீ தூங்கப்பா முன்னே.

ச-மு. நீயும் படுத்துக்கோ—ஆனா தூங்காதே—

ச. படுத்துக்கனா தூக்கம் வருமே அப்பா?

ச-மு. வராதெ இருக்கறத்துக்கு ஒரு யுக்தி சொல்லி தர்ரேன். ஏதுவான கஷ்டமான சமாசாரத்தெ பத்தி யோசனெ பண்ணு, அப்போ தூக்கம் வராது.

ச. நல்ல யுக்தி அப்பா, அப்படியே ஆவட்டும்பா—ஒரு ஒரு வேளெயிலே நீ புத்திசாலித்தனமா பேசரேப்பா.

ச-மு. [படுக்கையில் படுத்துக்கொண்டு] ஆடே சத்! வாயெ மூடு!—படுத்துக்கோ—சபாபதி, இந்த சன்னல் வழியா காத்து அதிகமாக அடிக்கிறாப்போலெ இருக்குதுடா.

ச. ஆமாம்பா, நான் கூட கவனிச்சேம்பா.—அத்தெ கொஞ்சம் எழுந்திருந்து சாத்திவுடப்பா.

ச-மு. ஏண்டா லேஜி பெக்கர்! (lazy beggar!) உனக்கு சொன்னா, என்னெயா எழுந்து சாத்தச் சொல்ரே?

ச. இல்லெ இல்லெப்பா—நான் சாத்தி உடரேம்பா.

[அப்படியே செய்கிறான்.]

ச-மு. அடே—தூங்காதே யிருக்ரத்துக்கு மொதல்லே என்னா யோசனெ பண்ணப்போரே?

ச. இப்போ—இந்த மானத்லே எத்தனி நட்சத்திரம் இருக்குது இன்னு எண்ணலாம் இன்னு இருக்கரேம்பா.

ச-மு. ஆ!—நல்ல யோசனெ—எண்ணு—எண்ணு—சரியா—

[தூங்குகிறார்.]

ச. [விரலால் சுட்டி எண்ணிக்கொண்டு வருகிறான்.] அப்பா! அப்பா! இதுலெ ஒரு கஷ்டம் இருக்குதுப்பா—நான் எண்ணிகினு வந்தா, இந்த மோங்க வந்து மறைச்சூடுதப்பா!—திருட்டு நட்சத்திரங்கப்பா! எங்கே நானு சரியா எண்ணி உடரேனோ இன்னு மறைச்சிகிதுங்கப்பா!—அதோ பாரு திரும்பியும் மறைச்சிகிது! நான்

சொல்லிடரேம் அப்பா கிட்ட !—

[சபாபதி முதலியார் அருகில் போய்]

அப்பா ! அப்பா !— தூங்கிவிட்டையா என்ன ?

[தட்டி எழுப்புகிருன்.]

ச-மு. அடெ ! சத் !—என்னுடா அது தூக்கத்துலே எழுப் பரே ! என்ன ஒணும் ?

ச. ஒண்ணுமில்லேப்பா, இதுக்குள்ள தூங்கிட்டையா இல்லேயா இண்ணு பாத்தேம்பா.

ச-மு. அதுக்கா என்னே எழுப்பினெ ?

ச இல்லாப்போனு என்னமாப்பா தெரியரது எனக்கு ?— அதுவுமில்லாதெ நீ தூங்கிக்கினு இருந்தா நான் சொல்ரது ஒனக்கு என்னமாப்பா கேக்கும் ?

ச-மு. என்னடா சொல்லணும் ? சொல்லு சீக்கிரம்—தூக்கமாயிருக்குது. நட்சத்திரங்களெ யெல்லாம் எண்ணூட்டையா ?

ச. இல்லெப்பா, அத்தெ சொல்ரத்துக்குதான் எழுப்பனேன்— இந்த மப்புங்களெ யெல்லாம் மறைச்சிக்கத் தேவலெ இண்ணு சொல்லப்பா— நானு எண்ணிகினே வந்தா நடுப்பலே வந்து மறைச்சிகிதப்பா !

ச-மு. மப்புங்களே மறைச்சிக்கத் தேவலெ இண்ணு நானு என்னமாடா சொல்ரது ? அதெல்லாம் முடியாது போ.

ச. ஆனுல் என்னுலே நட்சத்திரங்களெ எண்ண முடியாது போ—

ச-மு. அது போனு போவுது—வேறெ என்னடானு யோசனெ பண்ணு.

ச. அப்படியே பண்ரேம்பா—ரொம்ப நாளா எனக்கு ஒரு பெரிய சந்தேகம் இருக்குது.—அத்தெ யோசனெ பண்ரேம்பா—நம்ப பட்டணத்துப் பக்கத்லெ ஒரு சமுத்திரம் வெட்டனுங்களே—அந்த மண்ணெல்லாம் எங்கே போட்டாங்க இண்ணு யோசிக்கரேன்.

ச-மு. ஆ! அது நல்ல யோசனே.—அத்தெ கண்டு பிடிச்சி, அது எத்தனி படி மண்ணிருக்கும்.—அத்தெயும் கணக்கு போட்டு சொல்.

ச. ஆ! ஆ! அது முடியாதப்பா என்னலே—ரெண்டு வேலெ என்னலெ செய்ய முடியாது. மணலெ எங்கே போட்டாங்க இண்ணு கண்டு புடிக்கரத்துக்கு முன்னே எவ்வளவு மணல் இருக்கும் இண்ணு எப்படிப்பா அளந்து பாத்து சொல்ரது?

ச-மு. ஆமாம்— சரிதான்— முன்னெ எங்கெ போட்டாங்க இண்ணு யோசனெ பண்ணி பாரு—கண்டு பிடிக்கிற வரைக்கும்—என்னெ எழுப்பாதே— [தூங்குகிருர்.]

ச. எங்கெ போட்டிருப்பாங்க அவ்வளவு மண்ணையும்?—இப்படி மானத்தெ பாத்துகினு யோசனெ பண்ண நட்சத்திரங்க காபகம் வருது. கவுந்து படுத்துக்கலாம்—அப்பா—அப்பா— தெரிஞ்சிப் போச்சப்பா— எனக்குக் கூட தூக்கம் வருதப்பா— [குறட்டை விட்டு தூங்குகிருன்.]

ஒரு பக்கமாக கிருஷ்ணசாமியும், சத்திரத்து பிராம்மணன் விஸ்வநாத ஐயரும் வருகிருர்கள்.

கி. தூங்கராப்பொலெ இருக்குது!

ச-பி. ஆமாம்—எழுப்பவா?

கி. வேண்டாம்—நம்பொ வந்ததுகூட தெரியாது அதுத்து தூங்கராப்போலே இருக்குது.— இதோ!— சாவியெ கீழே போட்டிருக்குராங்க பாருங்க!— [அதை எடுத்து] ஒரு வேடிக்கை பண்ணலாம்—ஐயர்!— உங்க வீட்லெ பழங் கந்தெ கிந்தெ இருந்தா என்னமானும் குப்பையெல்லாம் வைச்சி கட்டி ஒரு மூட்டெ கட்டி கொண்டாங்க சொல்ரேன்.

ச-பி. அப்பறம் மொதலியாருக்கு தெரிஞ்சா எம் பேர்லெ கோவிச்சிக்குவாரே?

கி. அதெல்லாம் கோவிச்சிக்க மாட்டாரு—பொங்கல் பண்டிகையிலே, என்னவேடிக்கை வேணுமிண்ணாலும் பண்ணலாம். நீங்க சீக்கிரம் கட்டி கொண்டாங்க சொல்ரேன்.—நான் இருக்கரேன்—வேடிக்கெ தானே.

[விஸ்வநாத ஐயர் போகிருர்.]

சந்தடி பண்ணக்கூடாது !—

[பெட்டியைச் சாவியால் திறந்து அதனுள்ளிருக்கும் துணிகளை யெல்லாம் மூட்டையாகக் கட்டுகிருன்.]

விஸ்வநாத ஐயர் மறுபடி வருகிருர்.

ச-பி. இதோ ! [ஒரு பழய மூட்டையைக் கொண்டுவந்து வைக்கிருர்.]

கி. சத்தம் போடாதைங்கையா !

ச. [பாதி தூக்கத்தில்] அப்பா—என்னமோ !—சந்தடி கேக்குதுப்பா— திருடருங்க யாராவு வந்திருக்கராங்களா—பாரப்பா— [மறுபடியும் தூங்குகிருன் ; கிருஷ்ணசாமி தான் கட்டிய மூட்டையை எடுத்துக்கொண்டு, விஸ்வநாத ஐயரை அழைத்துக்கொண்டு விரைந்து போகிருன்; போகும் பொழுது கிருஷ்ணசாமியின் சாவிக்கொத்து சபாபதியின்மீது விழுகிறது.]

என்னப்பா அது சாவியாலெ அடிக்கரெயெ என்னே ? நான் தூங்கலேப்பா இண்ரே— [எழுந்திருந்து] அடடே ! என்ன பொட்டி தெறந்திருக்குதே ! ஆ !—துணி யெல்லாம் காணோம் !—யாரோ திருடன் வந்தாப் பொலெ இருக்குது ! அப்பா எழுந்தா நல்ல ஓதெ வுழும் நம்புளுக்கு !—இதுக்கென்ன பண்ரது ?

ச-மு. [விழித்துக்கொண்டு] அடே சபாபதி !

ச. ஏம்பா !

ச-மு. ஒண்ணுமில்லே முழுச்சிகினு இருக்கரையா இண்ணு கேட்டேன்.

ச. நீ பயப்படாதேப்பா— இனிமேலெ எனக்கு தூக்கம் வராதப்பா.

ச-மு. ஏன்? அந்த சமுத்திர மணலெ எங்கெ போட்டாங்க இண்ணு கண்டு பிடிக்கலையா?

ச. அது அப்பவே கண்டு பிடிச்சூட்டேம்பா— இப்போ வேறெ ஒரு பெரிய யோசனெ பண்ரே.

ச-மு. அதென்னடாடா கண்டு பிடிச்சே? எங்கெ போட்டாங்க அந்த மணலெ எல்லாம் தெரியுமா?

ச. அத்தெ அப்பவே கண்டு புடிச்சூட்டேம்பா— அந்த பெரிய சமுத்திரம் வெட்டன மணலெ எஙகே போட்டிருப்பாங்கப்பா?—வெளியிலெ போட்டா பெரிய மலெ யாட்டம் பூடாதா? அத்தெஹாட்டு அந்த சமுத்திரத்துக் கிழவே போட்டிருக்கணும்பா!—

ச-மு. ஊம்—நல்ல யுக்திதான்—ஆனல் இப்பொ அந்த மணல் எல்லாம் எவ்வளவு இருக்கும் இண்ணு கணக்குப் போட்டுப் பார்.—நான் இன்னம் கொஞ்சம் தூங்கரேன்.

ச. அது இப்போ முடியாதப்பா.—சமுத்திரத் தண்ணியெல்லாம் வத்திப்போனதான் அளக்க முடியும். இப்போ. வேறெ ஒரு பெரிய யோசனெ பண்ரேம்பா—ரொம்ப கஷ்டமான யோசனெ அப்பா, அது மீதி ராத்திரி யெல்லாம் தூக்கம் வராதப்பா.

ச-மு. அது என்னடா அப்படிப்பட்ட யோசனே?

ச. நீ—நானு சொன்ன—எம்மேலெ கோவிச்சிக்க மாட்டே அல்லாப்பா?

ச-மு இல்லெ சொல்லு?

ச. ஆணெபடிக்கி?

ச-மு. ஆமாம் சொல்லு.

ச. அப்பாணே?

ச-மு. சரிதான் சொல்லுடா.

ச. அது என்னண்ணு?—யாரோ திருடன் வந்து நம்போ தூங்கிகினு இருக்கும்போது—உம்பொட்டிபெ தெறந்து

துணி யெல்லாம் தூக்கிகினு பூட்டாம்பா!— இப்பெ, நாளேக்கு நம்பெ பொறப்படும்போது பொட்டியெ தூக்கிகினு போரதா, வாணுமா? இல்லெ தூக்கிகினு போரதிண்ணு, நீ தூக்கிகினு போரதா நான் தூக்கிகினு போரதா?—இண்ணு யோசனெ பண்ரேம்பா!—

ச-மு. ஹல்லோ! (bullo) என்னடா அது?

[எழுந்து பெட்டியைப் பார்த்து]

ச. அப்பா! அப்பா! எம் மேலே கோவிச்சிக்கக் கூடாது! ஆணெ யிட்டிருக்கரேன்! ஆணெயிட்டிருக்கரேன்!

ச-மு. ஏண்டா! இதுக்கா இந்த யுக்தி பண்ணே!

ச. ஆமாம்பா! [சிரிக்கிருன்.]

ச-மு. சிரிப்பு ஒண்ணு இதுக்கு!—ஏண்டா [தானும் சிரிக்கிரூர்.]

ச. அப்பா! அப்பா! [சபாபதி முதலியாரின் காலில் விழுந்து] எனக்கு சம்பளம் ஒஸ்தரேண்ணேபேப்பா!

ச-மு. ஏண்டா! இப்போதான் அத்தெ கேக்க சமயமோ?

ச. நேத்து கேட்டப்போ—நீ தானே சொன்னேப்பா—இப்பொ கேக்காதே—நானு எப்பவாது சந்தோஷமா சிரிச்சிகினு இருக்கரப்பொ கேளு இண்ணு!—

ச-மு. இப்பொ நானு சந்தோஷமா யிருக்கரேனு?

ச. இல்லேப்பா?—சிரிச்சயேப்பா?—

ச-மு. சிரிக்காதே என்னு செய்ரது—உன்னெ கட்டிகினு அழரது! தூங்காதெ முழிச்சிகினு இர்ராண்ணு—தூங்கிவுட்டுதும் இல்லாதெ—

ச. நான் தூங்கக் கூடாதிண்ணுதாம் பாத்தேம்பா—என்னுமாவோ தூக்கம் வந்தூட்டுதெப்பா—

ச-மு. எப்பொ எழுந்து பாத்தே இதெல்லாம்?

ச. நீ எம் மேலெ சாவி கொத்தெ போட்டையெ அப்பதாம்பா எழுந்து பாத்தேன்.

ச-மு. நான் உம்மேலெ சாவி கொத்தெ போட்டனு? என்னடா இது? கனவு கண்டையா?

ச. அப்பொ, நீதாம்பா கனவிலெ போட்டிருப்பே—இதோ பாரு சாவி கொத்து.

ச-மு. [அதை வாங்கிப் பார்த்து] அடடே! இது யாரு சாவிடா? என் சாவி கொத்தல்லவே! என் சாவி கொத்து பெட்டியிலேயே இருக்குதே அதோ! வெளக்கெ கொண்டா இப்படி.—

[சபாபதி விளக்கை அருகில் கொண்டு வருகிறான்.]

ஓஹோ! 'கிருஷ்ணசாமி'—கிருஷ்ணசாமிக்கு நான் ப்ரெசன்ட் (present) பண்ண கீ கார்ட் (key-guard) இதெப்படி வந்தது இங்கே?—விளக்கெ காட்டடா இப்படி— [பெட்டியுள் பார்த்து]

அந்த மட்டும் என் கடியாரமும் பணப்பையும் அப்படியே இருக்குது!—வந்த திருடன் இத்தெ உட்டூட்டுப் போனானே.—

ச. அப்பப்பா! வந்த திருடன் முட்டாள் திருடம்பா! துணி மூட்டையெகூட வைச்சூட்டுப் பூட்டாம்பா!

ச-மு. கொண்டாடா இப்படி!

ச. [ஒரு புறமாய்க்கிடக்கும் மூட்டையைக் கொண்டுபோய் கொடுத்து] அந்த முட்டும் எம் பேர்லெ பழி யில்லேப்பா.

ச-மு. [மூட்டையைப் பிரிக்க, அதில் ஒரு துடப்பக்கட்டை, பானை ஓடுகள், கந்தைத் துணிகள் முதலியன இருக்கக் கண்டு] உம் பேர்லெ பழியில்லெ அப்பா! என்னு பார் இது?

ச. அடடே! இதல்லாம் என்னமாப்பா வந்துது இங்கே?

ச-மு. ஓ! எஸ் (oh! yes!) தட் இஸ் ரைட் (that is right) அடெ சபாபதி, நீ சர் லாக் ஹோல்ஸ் (Sir Lock Holes) படிச்சிக்கரையா?

ச. அதென்னு புஸ்தகம்பா அது?

ச-மு. டாம் பூல் (damn fool!) ஒண்ணும் தெரியாத மடையன் நீ! சர் லாக் ஹோல்ஸ் என்றவர் புஸ்தகமாடா? அவர் ஒருபெரிய சீப் இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் (chief inspector of police) சீமையிலே யிருக்கிறவர், அவர் என்ன செய்வார் இண்ணா—ஒரு சின்ன தொடப்பக்குச்சு ஆப்பிட்டா, அத்தெக் கொண்டு, இன்ன வருஷம் இன்ன மாசம் இன்ன தேதியிலே இந்த தொடப்பக்கட்டையாலே இன்னார் இன்னாரே அடிச்சாங்க இண்ணு கண்டு புடிச்சி வுடுவாரு.

ச. அதென்னமாப்பா கண்டு புடிச்சி வுடுவாரு?

ச-மு. அதெல்லாம் உனக்கு சொன்னாகூட தெரியாது—இப்பொ இந்த தொடப்பத்தினாலே கண்டு புடிக்கிரோம்பார்—நம்ப மச்சா இருக்கிறானே கிருஷ்ணசாமி, அவன் இங்கே வந்து, இவ்வளவு வேலையும் செய்திருக்கரான்—நம்பௌ வேடிக்கெ பண்ணணும் இண்ணு—பொங்கல் பண்டிகையல்லா?—ஆவட்டும், அவனெ நம்ப வேடிக்கெ பண்ணலாம்!—எனக்கொரு நல்ல யுக்தி தோணுது, இந்த மூட்டையெ மறுபடியும் சரியா கட்டு சொல்ரேன்.

சு. இதெல்லாம் என்னாத்துக்கப்பா?

ச-மு. கட்ரா இண்ரேன்!—சொன்னபடி செய்.

[சபாபதி அப்படியே செய்கிறான்.]

இந்த பொட்டியிலே போடு—பளுவு இல்லாத பொட்டியெ தூக்கிகினு போனா, கண்டு புடிச்சூடுவாங்க—பூட்டு இத்தெ.

ச. என்னப்பா இது, இத்தை யெல்லாமாப்பா உங்க மாமியாரு ஊட்டுக்கு எடுத்துக்கினு போரது!—அதுவும் பொங்கல் பண்டிகைக்கு போவும்போது?

ச-மு. அடே! அதனப்பிரசங்கி! வாயெத் தெறக்காதே—நான் சொன்னபடி செய்—நடந்த சமாசாரம் ஒண்ணையும் ஓர்த்தருக்கும் சொல்லாதே. கப்சப்! என்னமானா ஒரு

வார்த்தெ வெளிவந்துதா உன்னெ உடனே டிஸ்மிஸ் (dismiss) பண்ணி விடுவேன். வாயெ மூடிக்கினு இருந் தேண்ணு சம்பளம் ஒஸ்துவேன். இப்போ படுத்துக் கப் போ, காலமே எழுந்திருக்கலாம்.

[இருவரும் படுத்துக்கொள்ளுகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

—oo✿oo—

இரண்டாம் அங்கம்

முதல் காட்சி

இடம்—கோளப்பஞ்சேரியில் குப்புசாமி முதலியார் வீட்டில் ஓர் அறை. காலம்—காலை.

சபாபதி முதலியார் ஒரு கடிதத்தை படித்துக்கொண் டிருக்கிறார்.

சபாபதி ஒரு மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஓடி வருகிறான்.

ச. இதோ கொண்டாந்தூட்டேம்பா! நீ சொன்னபடியே அந்த மூலையிலேயே ஒளிச்சி வைச்சிருந்துதப்பா!-இது உனக் கெப்படியப்பா தெரிஞ்சுது?

ச-மு. இந்தக் காகிதத்திலே எல்லாம் தெரிஞ்சுது.

ச. இது எதப்பா காயிதம்?

ச-மு. எம் பேமிலி (family) ரகஸ்யமா எழுதுச்சிடா.

ச. அப்படி இண்ணா?

ச மு. என் சமுசாரம் எழுதுச்சிடா இண்ரே!

ச. ஏ!—உனக்கேதப்பா இதுக்குள்ள சம்சாரம்?

ச-மு. சம்சாரம் இண்ணு தெரியலேடா?—அது—எழுதுச்சுடா?

ச. ஓ! இப்பொ தெரியுது!—உம் பெண்சாதியாப்பா எழு துச்சி? அத்தெ சொல்ல வெக்கப்படரையாப்பா?—என்னு யெழுதி யிருக்குது, எனக்கு படிச்சிகாட்டப்பா! அதிருக்கட்டும்பா!—உனக்கு சோபனம்கூட ஆகலேயே இதுக்குள்ள உனக்கு என்னமாப்பா எழுதுச்சி?

ச-மு. ஓ எஸ்! (oh yes!) அதாம் இங்கிலீஷ்லே எழுதி யிருக் குது! இது இங்கிலீஷ்கார் வழக்கம். வைப் (wife) ரொம்ப, இன்டெலிஜன்ட்கர்ல் (intelligent girl) அடே, இந்த மூட்டையெ அவுத்து முன்னே யிருந்தபடியே நம்ப துணியெல்லாம் வைச்சூடு.

ச. இதோ வைக்கரேம்பா—அந்த காயிதத்லே என்னு எழுதி யிருக்குது சொல்லப்பா.

[துணிகளை யெல்லாம் பெட்டியில் முன் பிருந்தபடி வைத்துவிடுகிறான்.]

ச-மு. [படித்துக்கொண்டே] மை டியரெஸ்டு ஹஸ்பெண்ட் (my dearest husband)—

ச. என்னுப்பா அது? இங்கிலீஷ்லே படிச்சா, அல்லாம் படிச்சி தமிழ்லே சொல்லிடப்பா.

ச-மு. சொல்ரேன்—என் தம்பி பொங்கல் பண்டிகையிலே உங்களெ எழுத்தாளி பண்ரத்துக்காக உங்க துணி யெல்லாம் எடுத்து வந்து மூட்டெ கட்டி வைச்சிருக் கரான், அந்த மூட்டையெ நான் மொள்ளமா எடுத்து வெளக்கு ரூம் (room) பரண்மேலே வைச்சிருக்கரேன், அத்தெ மொள்ளமா யாருக்கும் தெரியாமெ எடுத் தும் போய் வைச்சிகிங்கோ—அப்புறம் நீங்க அவனெ ஏமாத்தலாம்.—

ச. ஏம்பா! உனக்கானு உம் பொண்சாதி ரொம்ப புத்தி சாலியா யிருக்குதப்பா!

ச-மு. ஆமாம், எனக்கும் அப்படித்தான் தோணுது—இதுலெ கடைசியிலெ என்னமோ எழுதியிருக்குது, அதுக்கு

தான் அர்த்தமாவலெ—யூ தஸ் டர்ன் தி டேபில்ஸ் (you thus turn the tables)—இண்ணு என்ணு அர்த்தம்?

ச. என்னுப்பா—உனக்கு வெக்கமில்லேப்பா? பொண்சாதி எழுதின இங்கிலீஷ் அர்த்தமாவலெ இண்ரையேப்பா? அதுக்குதான் அப்பவே நானு தலெப்பாடா அடிச்சி கனெ, கொஞ்சம் கஷ்டப்பட்டு படியப்பா படியப்பா இண்ணு.

ச-மு. அடெ! அதனப்பிரசங்கி! இங்கெ எல்லாம் அந்த மாதிரியா பேசாதே; மாமியார் வூட்லெ கவர்த்தெ கெட்டு பூடும்—டர்ன் தி டேபில்ஸ் (turn the tables)—மேஜைகளை யெல்லாம் திருப்பிப் போடுங்கள்.—இப்பொ அர்த்தமாச்சி!—ஆனாலும் என்னத்துக் கோசரம் இப்படி செய்யச் சொல்லுது நம்மே? எதுக்கும் அது எழுதினப் பிரகாரம் நம்பொ செய்தூடலாம். இல்லாப்போனா அதுக்கு வருத்தம் வரும்—அடே சபாபதி, இந்த மேஜைங் களெ யெல்லாம் திருப்பிப் போடடா.

ச. ஏம்பா?

ச-மு. சொன்னபடி செய். முட்டாள்! நீ இங்கிலீஷ் படிக்காதத்துனலெ இவ்வளவு கெடுதி.—வென் அட் ஹோம் டு ஆஸ் தி வைப் சேஸ் (when at home do as the wife says) அந்த பழமொழி கேட்டிருக்கரையா நீ?

ச. அப்டி இண்ணு என்ணு அர்த்தம் அப்பா?

ச-மு. மாமியார் வூட்லே இருக்கும்போது பெண்சாதி சொல்றபடி கேள், இண்ணு அர்த்தம்.

ச. இதோ திருப்பி போடரேம்பா.

[அங்ஙனமே செய்கிருன். அப்பொழுது மேஜையின் மீது வைத்திருந்த ஒரு சிறு புட்டியை உடைத்து விடுகிருன்.]

அப்பாப்பா! புட்டி ஒடைஞ்சி பூட்டுதப்பா!

ச-மு. பரவாயில்லே! இதை யெல்லாம் நாம் கவனிக்கக்கூடாது. இதுக்கெல்லாம் அவ்வையார் தமக்கு உத்தரவு கொடுத்

திருக்கராங்க. "உடைவது விளம்பேல்" என்று சொல்லி யிருக்கராங்க. அத்தொட்டு உடைஞ்சதெ எடுத்து வெளியே போட்டேட்டு கம்மிண்ணு இருந்துடு.

[சபாபதி அப்படியே செய்கிருன்.]

அப்பா, சத்திரத்லெ இருந்துகொண்டாந்தமே அந்த மூட்டையெ என்ன செய்யரது?

ச-மு. அடடே! எனக்கு ஒரு யோசனெ தோணுது!—இந்தா, இந்த மச்சான் சாவியெ எடுத்தும்போயி அவன் பெட்டி அந்த அறையிலெ வைச்சிருக்குது, அத்தெ தெறந்து இந்த மூட்டையெ அதுலே வைச்சி பூட்டிகினு வந்தூடு, அவன் வர்ர வேளெயாச்சி சீக்கிரம் போ.

ச. ஆமாப்பா! நல்ல வேடிக்கேப்பா!

[மூட்டையை எடுத்துக்கொண்டு விரைந்து போகிருன்.]

ச-மு. அல்லாம் சரிதான்— இது ஒரு பெரிய டிபிகல்டி (difficulty) இருக்குதே.—இந்த லெட்டருக்கு நம்ப பதில் எழுதணுமா வேணுமா? எழுதரதானு—இங்கிலீஷ் லெ எழுதரதா? தமிழ்லெ எழுதரதா? இங்கிலீஷ்லெ எழு தரதானு— மிஸ்டேக் (mistake)உழுந்தா ரொம்ப அவ மான கேசாகும், தமிழ்லெ எழுதனு வைப்(wife) எனக்கு இங்கிலீஷ்லே எழுத தெரியாது இண்ணு நெனச்சிகினு ஆம் நெனச்சிக்கும்! இங்கிலீஷ்லேதான் எழுதிப் பாக் கலாம். [ஒரு காகிதத்தை எடுத்து]

மை டியரெஸ்ட் வைப் (my dearest wife) டியரெஸ்ட் இண்ணு அதுவும் எழுதி நம்பளும் எழுதனு நண்ணு யிருக்காது— அதுக்கு மேலே எழுதணும்— மை டிய ரெஸ்ட், ரெய்ஸ்ட் டு தி பவர் ஆப் என் (raised to the power of n) இண்ணு அர்த்தமாகும்படி என் (n) மேலே போடலாம்—

சபாபதி ஓடி வருகிறான்.

ச. அப்பாப்பா! வைச்சூட்டேம்பா—அவர் வர்ரத்துக்குள்ளோ—இப்பொதாம் அவரு மொள்ள கீழே வந்துகினு இருக்கரூரு!

ச-மு. அடே, இந்த சாவியெ அந்த மெத்தெபடி மூலையிலெ ஒளிச்சி வைச்சூடு மொள்ளமா யாருக்கும் தெரியாதே. போ சீக்கிரம் [சபாபதி போகிறான்.]

மற்றொரு புறமாக கிருஷ்ணசாமி, தினகரசாமி நாயுடுவை அழைத்துக்கொண்டு வருகிறான்.

ச-மு. வா அப்பேன், இத்தனி நாழியா தூங்கரது?

கி. ஓ ஹோ! நீங்க தூங்கிவிட்டு எம்பேர்லெ பழி போட பாக்கரைங்களோ? நான் அப்பவே எழுந்து வந்து பாத்தேன், நீங்க தூங்கிகினு இருந்தைங்கோ, ராத்திரி தூக்கமில்லாதிருந்தாப்போலெ யிருக்குது தூங்கட்டும் இண்ணூட்டு கொஞ்சம் ஆஸ்பத்ரிவரைக்கும் போய் வந்தேன்.

ச-மு. ஆஸ்பத்ரியிலே என்ன வேலெ இப்போ?

கி. உங்க ஆள் எங்கே சபாபதி? அவனுக்கு அந்த சத்திரத்து சாப்பாடு ஒத்துக்கலெ வயறு கோளாரு இருக்குதுண்ணு, அதுக்காக ஓமம் வாடர் (omum-water) வாங்கியாந்தே—

சபாபதி ஓடி வருகிறான்.

ச. அப்பாப்பா, யாருக்கும் தெரியாதெ ரகஸ்யமா—நீங்களா இங்கே இருக்கரைங்க?

கி. உம்—சொல்லு—ரகஸ்யமா என்ன செய்தே?
[சபாபதி விழிக்கிறான்.]

ச-மு. அவன் சொல்ல பயப்படரான்—தன் வயறு கோளாரு இருக்குதுண்ணு எங்கிட்டகூட சொன்ன, அதுக்கு

ஒரு பச்சிலெ மருந்து சொல்லி யாருக்கும் தெரியாதே சாப்டுட்டு வா இண்ணு சொன்னெ—அதான்—ஏண்டா, நான் சொன்னபடி செய்தையா ?

ச. செய்தூட்டேம்பா.

ச-மு. இப்போ வயறு செரியா இருக்குதெ இல்லேயோ?

ச. சரியா போச்சி அப்பா

கி. இதோ உனக்கு மருந்து வாங்கி வந்தேண்டாம்பா—இது என்ன தண்டமாவா போரது? ஆனாலும் பரவாயில்லெ—வைச்சிவ்வெ, எப்பவாது யாருக்காவது வயறு கோளாறு இருந்தா கொடுக்கலாம். நல்ல மருந்து இது.

[மூலேயில் மேஜையின் பேரில் வைக்கப் போய்]

அடடே! இது என்ன இது ? மேஜைங்களெ யெல்லாம் திருப்பிப் போட்டு வைச்சிருக்குது ! யார் வேலெ இது ?

ச-மு. அப்பெப்பென் ! அத்தெ தொடாதே அப்படியே இருக்கட்டும்.

கி. இது என்ன வேடிக்கெ அத்தான் ? இது ஒரு வேடிக்கையா !

[திருப்பிப் போட்டு அதன்பேரில் மருந்து புட்டியை வைக்கிறான்.]

ச-மு. இது யாரப்பென் இது ?

கி. ஐ பெக் யுவர் பார்டன் (I beg your pardon) என்னெ மன்னிக்கணும். முன்னயெ இவரெ இன்ட்ரோட்யூஸ் (introduce) பண்ணி யிருக்கணும் நான். இவர் நம்பொ எதிர் வூட்டுக்காரரு, சின்னபோது மொதல் சிநேகிதம், இவர் பேரு, எம். தினகரசாமி நாயுடுகாரு.

ச-மு. ரொம்ப சந்தோஷம்—வாங்க நாயுடுகாரு—உக்காருங்க—நீங்க என்ன ஆர்மி (army) லெ இருக்கரைங்களா ?

கி. இல்லெ இவர் ஜமீன்தார்.

ச-மு. ஓ! ஐ சி! (Oh I see!) மீசெயெ பார்த்து மிஸ்டேக் (mistake) பண்ணேன். எந்த வூர் ஜமீன்தார்?

கி. இங்கே கொஞ்சம் தூரத்லெ வண்ணாரப் பேட்டை இண்ணு ஒரு ஊரு இருக்குது, அந்த வூர் ஜமீன்தார்.

ச-மு. மெத்த கிளாட் (glad) எம். தினகரசாமி நாயுடுகாரு, ஜமீன்தார் ஆப் (of) வண்ணா்பேட்டை.—மிஸ்டர் (Mr.) நாயுடுக்கு ஒரு ஸ்மால் சஜ்ஜஸ்டன் (small suggestion) எம் தினகரசாமி நாயுடுகாரு இன்ற பேரு நண்ணாயில் லெ—ரொம்ப பெரிசா இருக்குது, அத்தெ கண்டிராக்ட் (contract) பண்ணி, மெஜர் தீன் (Major Dean) இண்ணு வைச்சிகிங்களேன்? அல்லாமலும் வண்ணாரப்பேட்டை ஜமீன்தார் இண்ணு, வேறெ என்னமாணுலும் அர்த்தம் பண்ணு வாங்க— வெண்ணார் பாலிஸ் (Vennar Polis) இண்ணு மாத்திகிங்க. மெஜர் (Major) தீன், ஜமீன்தார் ஆப் (of) வெண்ணார் பாலிஸ் (Vennar polis) இண்ணு நண்ணு யிருக்கும்.— ஏம்பே, இவருக்கு இங்கிலீஷ் தெரியுமா?

கி. கொஞ்சம் தெரியும், மர்ரேஸ் ஸ்பெல்லிங் புக் (Murray's spelling book) வரைக்கும் படிச்சி அப்புறம் உட் டேட்டாரு

ச-மு. ஐ சீ (I see) மாலியர் (Moliere) இண்ணு ஒரு இங்கிலீஷ் பொயெட் (Poet) சொல்ராருங்க (நாயுடுக்கு)—வாட் எவர் தேர் இஸ், இஸ் இன் எ நேம் (whatever there is, is in a name). இந்த உலகத்துலெ இருக்கரதெல்லாம் பேர்லெ இருக்குது இண்ணு சொல்ராருங்கோ.— அத் தொட்டு உங்க பேரெ இனி மேலெ மெஜர்தீன், இண்ணு வைச்சூடுங்க.

தி. அட்லேனண்டி.

ச-மு. என்னுப்பென் இவருக்கு தமிழ் தெரியாதோ?

கி. அவ்வளவா தெரியாது. தெலுங்குதான் பேசரது— ஆனு நம்ப தமிழ்லெ பேசணு தெரிஞ்சிகிவாரு.

ச-மு. ஓ! நெவர் மைன்ட் (never mind) மெஜர் தீன் (Major Dean) நேனு தெலுங்கு நண்ணு பெசவேனண்டி, மீரு ஒண்ணும் பயப்படண்டி.

ச. இதென்னுப்பா அது? நீ இப்பொ பேசனது தெலுங்கா?

ச-மு. அடெ! முட்டாள்! மூடி வாயெ; உனக்கென்னடா தெரியும்? தெலுங்குக்கும் தமிழுக்கும் என்ன வித்யாசம்? எல்லாம் ஒரே பாஷெதான், தமிழ் பதங்களுக்கெல்லாம் ஒரு டி சேத்தூட்டா தெலுங்கா பூடுது. போங்கொ, பொண்டி, சாப்பிடுங்க—சாப்பிடண்டி, அவ்வளவுதான்—

கி. அதிருக்கட்டும், அத்தான், நாழியா போச்சு, காபி (coffee) சாப்பிடலாமா?

ச-மு. இதுக்குள்ள என்னத்துக்கு அப்பென்?

ச. ஏ! என்னுப்பா! கொஞ்சம் முன்னே ரொம்ப பசிக்குது காபி எப்பொ கொடுப்பாங்களொ தெரியாதுண்ணிகினு இருந்தையேப்பா!

ச-மு. அடெ! கழுதெ! பேசாதிரு, அப்பொ பசிச்சுது இப்பொ பசிக்கலெ.

ச. ஒனக்கு பசிக்காப்பொனு எனக்கு பசிக்குது அப்பா.

கி. இதோ வந்தூட்டுது காபி.—அடெ ராமா!— தத்தி ராமா!

ராமன் நகைத்த வண்ணம் வருகிறான்.

ரா. யேம்பா!

ச. அடடே தம்பி! நீ இங்கெயா இருக்கரே?

ரா. ஆம்பா!

கி. அடடே! ஏண்டாப்பா உன் தம்பியா இவன்?

ச. என் சித்தப்பா புள்ளெங்கோ.

கி. சரிதான், அப்பவே நெனச்சேன், உம்பந்துவாதான் இருக்கணும் இண்ணு. இருக்கட்டும்—அடே, அம்மா தாகத்துக்கு தயார் பண்ணி யிருக்கராங்க—சீக்கிரம் அதையெல்லாம் தட்டிலெ வைச்சி கொண்டா.

ரா. ஆவுத்தம்பா! [போகிறான்.]

ச-மு. அதென்னப்பென் அவனெ தத்திராமன் இண்ணு கூப்பிட்டையே?

கி. அவன் பேரு ராமன்தான், பட்டங் கொடுத்தேன் தத்திராமன் இண்ணு, தத்தியிலேயும் பத்தத்தி, எத்தெ கேட்டாலும் தெரியாதிண்ணுவான்! ஆனா ஒண்ணு, அழுமூஞ்சா இல்லாதே சிரிச்சமூஞ்சோடெ இருக்கரான் எப்பவும்.

ச. ஏம்பா? பட்டப்பேர் இண்ணா என்னப்பா அது?

ச-மு. பட்டப்பேருண்ணா பேரோடகூட சந்தோஷத்தினாலே என்னமானா சேத்து கூப்பிடரது.

ச. ஆனா, எனக்குக் கூட என்னமானாலும் பட்டப்பேர் கொடப்பா.

ச-மு. அல்லாம் ஆவட்டும் அப்பறம் யோசிக்கலாம்—

ராமன் ஒரு பெரிய தட்டில் தோசை முதலியன கொண்டு வருகிறான்.

ரா. தாப்பா— திந்த மூலையிலே வைச்சிக்கிற தத்துதான் மாப்பில்லேக்கி இண்ணு, பெரியம்மா, உங்கிட்ட லகஸ்யமா தொல்லத் தொன்னாங்க.

கி. தத்தி! பேசர ஒழுங்கெ பாருங்க!—பாருங்க நாயுடு, என்னண்ணாலும் மாப்பிள்ளெ மாப்பிள்ளெதான்!

தி. அவுனண்டி.

கி. இந்தாங்க அத்தான் உங்க தட்டு—நாயுடுகாரு இந்தாண்டி.

[இருவருக்கும் இரண்டு தட்டுகளைக் கொடுத்துவிட்டு தானொன்றை மேஜையின்மீது தன் எதிரில் வைத்துக் கொள்ளுகிறான்.]

ரா. போவத்துமாப்பா?

கி. போ—போயி காபி கொண்டா—அடே—

[அவன் அருகில்போய் ரகஸ்யமாய்]

ஏண்டா தத்தி! ரகஸ்யமா சொல்லு இண்ணுகா, ஓரக்க வா கத்தச் சொன்னுங்க உன்னே?

ரா. லேப்பா. [சிரிக்கிருன்.]

கி. இனிமேலக்கி இந்த மாதிரி தப்பு பண்ணேயா பாரு!

[இச்சமயம் சபாபதி முதலியார், தினகர சாமி நாயுடு தலே திரும்பி இருக்கும் சமயம் பார்த்து, தன் தட்டையும் அவர் தட்டையும் மாற்றி விடுகிருர், ராமன் போகிருன்.]

ஏன் அத்தான் சாப்பிடலே?

ச-மு. நீ வாப்பேன், நீ இல்லாதையா? [சாப்பிட ஆரம்பிக்கிருர்.] அடடே! நாயுடுகாரு— வாயி புடிக்குமாண்டி? ஒரு தோசையெ அப்படியே உடராரே! வாயடைச்சிக்கப் போவுதையா?

கி. அதெல்லாம் வழக்கப்பட்டிருக்கிருரு—அதுலேயும் இந்த மசால் தோசெ இண்ணு அவருக்கு ரொம்ப இஷ்டம்.

ச-மு. ஐ சீ! (I see!) எம். தினகரசாமி நாயுடு இண்ணு, மசால் தோசை தினகரசாமி நாயுடு இண்ணு அர்த்தமோ?

தி. ஆ!—ஆ!

[தோசையை மெல்ல முடியாமல் கஷ்டப் படுகிருர்.]

ச-மு அடடே! பொரெக்கெ ஏறிகிச்சா என்ன? அப்பவே சொன்னேனே! அடெ சபாபதி! தலேயெ தட்டுடா.

[சபாபதி பலமாய்த் தட்டுகிருன்.]

ச-மு. அடடே! மொள்ளமா தட்டுடா!

ச. இல்லேப்பா! இல்லாப்போனு அப்படியெ பொறெக்கெ ஏறி செத்துப் பூடுவாரே!

தி. ஹா—ஹா— [குளறுகிருர்.]

4

ச-மு. இதென்னடா இது கஷ்டமாயிருக்குது! அத்தெ முழுங் கூடண்டி !

[தினகரசாமி நாயுடு ஜன்னலருகில் போய் முழிந்து விடுகிறார்.]

நாயுடுகாரு— கொஞ்சம் புட்டுச் சாப்பிடுங்க— ஒரே முட்டா தோசை தோசையா உடப்பாத்தா, இதாம் கஷ்டண்டி.

கி. சபாபதி, நீ என்னப்பா சும்மா இருக்கரையே, நீயும் கீழப்போய் சாப்பிடு. சீக்கிரம் போ—இல்லாப்போனா ராமன் அல்லாத்தையும் தீத்துடுவான்.

[சபாபதி போகிறான்.]

தி. [தோசையைப் புட்டுப்பார்த்து; முடியாமல்] இதி—ஏமண்டி ? (இது—என்னங்க?)

கி. அடடா!—இது உங்களுக்காவந்தது ?—என்னடாப்பா இண்ணு பாத்தேன் ! [நகைக்கிறான்.]

ச-மு. ஏம்பே ?— என்னெ ஏமாத்தெ பாத்தையே— நான் சென்னபட்டணம் தெரியுமா ?

கி. இல்லெ அத்தான்—பொங்கல் பண்டிகையாச்சே, ஒங்களெ வேடிக்கெ பண்ணணும் இண்ணு பாத்தா, இந்த நாயுடு ஆப்டுகிறாரு—அடடெ! இப்பொ தெரியுது, இந்த தோசையே போயி ஒரே முட்டா ஒருவாயிலெ திண்ணப் பாத்தாரு—அதாம் முடியலெ.— [நகைக்கிறான்.]

ச-மு. என்னப்பேன் பண்ணியிருக்குது சொல்லிவிடு இப்பொ.

கி. உங்களெ வேடிக்கெ பண்ணனும் இண்ணு ஒரு யுக்தி செய்தேன்—தோசக்கல்லுலெ ஒரு அகப்பெ மாவு வாத்துட்டு—மெலீஸ் மல்லுலெ தோசெ அளவு ரவுண்டா (round) மல் கத்திரிச்சி வைச்சிகினு இருந்து, அந்த மாவு மேலே போட்டு, அதுக்கு மேலே இன்னொரு அகப்பெ மாவு உட்டேட்டா சரி—ஒண்ணும் தெரியாது வெளிக்கி—அப்பறம் அத்தெ சாப்பிடப்போனா, நாயுடுகாரு கஷ்டப்

பட்டாரே அந்த மாதிரிதான் கஷ்டப்படணும்.—நாயுடு காரு அதி ஒத்து. (அது வேண்டாம்) தீனி போஞ்சேயண்டி (இதை சாப்பிடுங்க) ஊம்—அதிருக்கட்டும் என்ன அத்தான்? அந்த சுதேசி கோடிங் கிளாத் (coating cloth) வாங்கி வரச் சொன்னேனே, வாங்காந்தைங்களா?

ச-மு. எல்லாம் வாங்கி வந்திருக்கிரேம்பேன்.—அடடெ! நாயுடு காரு நீங்க என்ன, தோசெக்கி தொவயல் தொட்டுகிரைங்களா, இல்லாப்போனு, தொவையனுக்கு தோசெ தொட்டுகிரைங்களாண்டி?

கி. அவருக்கு தொவயல் இண்ணு ரொம்ப இஷ்டம்—நாயுடு இங்க கொஞ்சம் காவலனு (இன்னும் கொஞ்சம் வேணுமா?)

ச-மு. சரிதான்! வேணும்பெ அப்புறம் சீதபேதியாகும்.

கி. ஒத்தண்டி. (வேண்டாம்)

கி. எங்கெ அத்தான்? அந்த கிளாத்தெ (cloth) எடுங்க பாக்கலாம்.

ச-மு. டிரங்கிலெ (Trunk) இருக்குதப்பேன்.

கி. எடுங்களேம் பாக்கலாம்.

ச-மு. அப்பறம் ஆவட்டும்பேன்.—காபி (coffee) சாப்பிட்டாவட்டும்.

கி. ஏன் இன்னும் காபி (coffee) வல்லெ? அடே ராமா! தத்திராமா!

ரா. [கீழிருந்து] யேம்பா!

கி. கொண்டாடா காபி (coffee) சீக்கிரம்.

ரா. [கீழிருந்து] திதோ தொந்தார் ரேம்பா.

கி. இந்த டிரங்கிலெ (Trunk) தானெ வைச்சிருக்கைங்க? கொஞ்சம் சாவியெ கொடுங்க நான் தெறந்தெடுக்கரேன்.

ச-மு. டிரங்க் சாவியெ உங்கிட்ட கொடுக்கலாமா? அதுலெ என்னுமாறு ரகஸ்யம் எல்லாம் வைச்சிருப்பேன். அதை யெல்லாம் நீ பாக்கலாமா?

கி. இவ்வளவுதானே எம்பேர்ல நம்பிக்கெ?

ச-மு. இதுக்கெல்லாம் கோவிச்சிக்காதே அப்பேன். இப்பொ உன் டிரங்கெ திடீருண்ணு தெறந்து காட்டீண்ணு, காட்டுவையா? என்னுமாறு ரகஸ்யமா வைச்சிருப்பெ, அதெல்லாம் மத்தவங்க பாக்கலாமா?

கி. என் டிரங்கிலே அப்படி நீங்க பாக்கக்கூடாத ரகஸ்யம் ஒண்ணுமில்லெ.

ச-மு. ஆனு உன் டிரங்கெ தெறந்து காட்ரையா இப்பொ எனக்கு?

கி. ஓ! சந்தோஷமா; நீங்க உங்க டிரங்கே தெறந்து காட்டுங்க, என் டிரங்கெ அப்புறம் உங்களுக்கு காம்பிக்காப் போனு எம் பேரு கிருஷ்ணசாமி அல்லா!

ச-மு. சரி ஆனு—கொஞ்சம் பொறு—சபாபதி வரட்டும், அவங்கிட்ட தான் சாவி யிருக்குது.

கி. என்னமோ சாக்கு சொல்ரைங்க— அவனெ கேட்டா— சாவி தாரவாந்து போச்சிண்ணுவாம்.—

ச-மு. நானு சாவி தாரவாந்து போச்சிண்ணுவேன் —பாக்கலாம்.

கி. பின்னெ என்னு? ஒரு வேளெ அந்த துணி வாங்கி வர மறந்துபூட்டிருப்பைங்க, அதுக்காக இதெல்லாம் சாக்கு.

ச-மு. சாக்கா?—இப்பொ அந்த துணி அந்த பொட்டியிலே இருந்தா?

கி. நான் இல்லெண்ரேன், பந்தயம் கட்டலாமா?

ச-மு. சரி! நூறு ரூபா பந்தயம்.

கி. சரிதான்.

ச-மு. வேண்டாம்பேன். அப்பறம் நீதான் கஷ்டப்படுவெ— பந்தயம்தானே, ஒரு ரூபா கட்டலாம்.

கி. சரி.

ராமனும் சபாபதியும் காபி கொண்டு வருகிறார்கள்.

ரா. தாப்பா.

கி. ஏண்டா? இத்தெ கொண்டுவர இத்தனி நாழி என்னடா?

ரா. தோசெ துன்னேம்பா. [சிரிக்கிறான்.]

ச. [வாடிய முகத்துடன்] ஏம்பா, உங்கிட்ட ஒரு ரூபாயிருந்தா கொடுப்பா.

ச-மு. என்னாத்துக்குடா இப்பொ ரூபா ?

ச. ராமனோடெ நானு பந்தயம் போத்து தோத்துப் பூத் தேம்பா.

ச-மு. அடெய்! நீயும் என்ன அவனெப்போலெ தத்தத்தின்னு பேசரையே ?

ச. இல்லேப்பா, அவனோடே பேசி பேசி அப்டியே வரு தப்பா.

ச-மு. நான்சென்ஸ் (Nonsense) அதெல்லாம் வரக்கூடாது.

ச. இல்லெப்பா.

ச-மு. அதிருக்கட்டும்—அது என்னடா அது பந்தயம் ?

ச. ரெண்டு பேர்லெ யாரு அதிகமா தோசெ துண்ரோம் பாக்கலாம் இண்ணு பந்தயம் போட்டோம். நானு பத்து தான் திண்ணேன், அவன் பதிமூணு திண்ணுட்டாம்பா.

ச-மு. அல்லோ! தட் இஸ் எ ரிகார்ட்! (Hullo! that is a record) நானு உடனெ நம்ப கிருஷ்ணசாமி ஐயங் காருக்கு எழுதணும். இதுவரைக்கும் அவர்து தான் ரிகார்ட், பன்னெண்டு தோசெ! அத்தெ பீட் (beat) பண்ணி யிருக்கரான் ராமன்!—

கி. சபாபதி, இந்த டிரங்க் சாவி உங்கிட்டவா இருக்குது?

ச. ஆமாங்க.

ச-மு. அடே சபாபதி, இந்த டிரங்கெ திறந்து காட்டுடா மச்சானுக்கு. [சபாபதி திறக்கிருன்.]
அந்த துணி மூட்டையெ எடு— இந்தாப்பேன் உன் கத்தர் கிளாத் (Khadder cloth)—இது, மாமாவுக்காக சுதேசி மல் வாங்கி வந்தே—இது உனக்கு சரிகெ அங்க வஸ்திரம். இது மாமிக்கு புடவெ—இது —இது—உங்க சிஸ்டருக்கு—(sister)

ச. ஏ !— என்னுப்பா அது? இந்த சரிகெ புடவெ—உம் பொண்சாதிக்கி—அண்ணிக்கி—கொடுக்கச் சொன்னுங்களே அம்மா.

ச-மு. அடெ! அதனப் பிரசங்கி! நான் சொன்னத்துக்கு என்னடா அர்த்தம்?

ச. என்னுப்பா, சும்மா கோவிச்சிக்கரே, எனக்குக் கூடம் கொஞ்சம் இங்கிலீஷ் தெரியும்பா. சிஸ்டர் இண்ணுலும் வைப் (wife) இண்ணுலும் ஒண்ணு தானே அப்பா?

ச-மு. அசல் மடையன்! என் வைப் (wife) அவருக்கு என்னடா ஒணும்!

ச. ஓ! அப்படி சொன்னேயோ—சர்தாம்பா.

ச-மு. இப்பொ என்னுப்பேன் சொல்ரே? பந்தயம் கட்டனேயே கொண்டா ஒரு ரூபா.

கி. நான் கொடுக்கவேண்டியது சர்தான்—என்ன ஆச்சர்யம்?—அடே தத்திராமா, என் ரூமுக்கு (room) போய் என் டிரங்கெ தூக்கினு வா. [ராமன் போகிருன்.]

ச-மு. அது நியாயம்—என் டிரங்கெ நான் திறந்து காட்டனேனே இல்லேயோ, இப்பொ உன் டிரங்கெ நீ திறந்துகாட்டு பாக்கலாம்.

கி. நீங்களெ தெறந்து பாத்துங்கோ—எனக் கென்ன பயம்?
—இந்தாங்க சாவி—
[சாவியை இடுப்பில் தேடிப் பார்க்கிருன்.]
எங்கெ என் சாவி?—

ச-மு. ஓஹோ! சாவி காணோம் இண்ணு சொல்லப்போரையா என்ன?

ராமன் டிரங்கைத் தூக்கிக்கொண்டு வருகிறான்.

ரா. தாப்பா! லொம்ப பளுவா குதுப்பா!

கி. அடே! ராமா, என் சாவி ஒரு வேளெ படுக்கையிலெ விழுந்திருக்குதா பாருடா.—தேடி பாத்து எங்கெ யிருந்தாலும் எடுத்துவா—ஓடு! [ராமன் மெல்ல போகிறான்.]

ச-மு. அடடே! காபி (coffee) ஆறிபூடப் போவுது—சரியா யிருக்குது சூடு—

[சபாபதி முதலியாரும், கிருஷ்ணசாமியும் காபி சாப்பிடுகிறார்கள்; தினகரசாமி நாயுடு மாத்திரம் காபி லோட்டாவை கையால் வீசி ஆற்றுகிறார்.]

அல்லோ! (Hullo!) என்ன மேஜர்தீன்! அப்படி ஆத்தரைங்களே?— அப்பேன், நான் ஒரு கெஸ் (guess) பண்ரேம் பார்—நம்ப நாயுடு காலமெயிலே வழக்கமா நீராகாரம் சாப்பிட்ரதோ?

கி. ஆமாம் அத்தான், அது உங்களுக்கு என்னமா தெரிஞ்சுது?

ச-மு. நீ சர் லாக் ஹோல்ஸ் (Sir Lock Holes) படிச்சிருக்கிகயா? கானன்ட் ஆயில் (Cannoned Oil) என்றவர் எழுதி யிருக்கிறார். அத்தெ படிச்சிருந்தா எல்லாம் சொல்லி விடலாம். அவரு கால்லெ பூட்ஸ்லே (boots) இருக்கர அழுக்கெ பாத்து நேத்து கத்திரிக்கா சாம்பார் சாப்டே இண்ணு சொல்லி வுடுவாரு.

கி. என்ன அத்தான், கப்பி உடரைங்க—இது என்னடா கண்டு புடிக்சைங்க சொல்லுங்க இண்ணு?

ச-மு. இத்தெ மாத்ரம் உனக்கு கத்து கொடுக்கரே, மத்ததுக்கெல்லாம் கேக்காதே.—நீராகரத்லெ உப்பெ போட்டு அத்தெ கரையரத்துக்கோசரம் அப்படி ஆட்ர வழக்கம் இருந்துதான், காபி லோட்டாவெ இப்படி ஆட்டி யிருக்

கோணும்—சொல்லிவிட்டா சிம்பல்லா (simple) தோணும், அது கண்டுபிடிக்கரதுதாம் கஷ்டம்.

ராமன் மறுபடியும் வருகிறான்.

ரா. [சிரித்துக்கொண்டே] ஆப்பில்லேப்பா!

கி. அதுக்கு சிரிப்பென்னடா!—எங்கேயும் தேடிப் பாத்தையா?

ரா. அல்லாம் தேததேனம்பா—ஆப்பில்லேப்பா. [சிரிக்கிறான்.]

ச-மு. நான் சொன்னா என்னமோ நம்பமாட்டே னிண்ணையே. இப்பொ அந்த சாவி எங்கே யிருக்குதுண்ணு சர் லாக் ஹோல்ஸ் மெதட் (Sir Lock Holes method) னாலே கண்டுபிடிச்சி சொல்ரேம் பார்.

கி. ஏதோ பாக்கலாம்.

ச-மு. உம் பெரு விரலெ காட்டு.

[கிருஷ்ணசாமியின் பெரு விரலைப் பரிசோதிப்பதுபோல் பார்த்து]

அடே சபாபதி, கீழே இரங்கிப்போகிற மெத்தைப் படியின் மூலையிலே அந்த சாவி யிருக்கும்—போய் எடுத்துவா—ஓடு! [சபாபதி விரைந்து போகிறான்.]

கி. என்ன அத்தான் கதெ இது?

ரா. யாப்பா! தங்கே தான் குதுப்பா!

கி. இருந்தா, நீ ஏண்டா எடுத்தாரலே?

ரா. உன் சாவி அங்கே என்னமா உனும், தத்தொத்து அது உன் சாவியல்லா இன்னு வந்தூத்தேம்பா. [சிரிக்கிறான்.]

கி. பத்ததத்தி! தத்திராமா! உனக்கு சரியான பேர் வச்செண்டா. உனக்கு ஒரு ரூபா பைன்! (fine)

சபாபதி மறுபடி வருகிறான்.

ச. இந்தாங்க சாவி.

[சபாபதி சாவியைக் கொண்டுவந்து கொடுக்கிறான்.]

ச-மு. பாத்தையாப்பேன்—நம்பமாட்டெ னிண்ணையெ?

கி. என்னமோ சமாசாரம் நடந்திருக்குது !

[சாவியைக்கொண்டு டிரங்கைத் திறக்கிறான்.]

வாட் நான் சென்ஸ் (what nonsense) இது என்னமா வந்துது இங்கே!

ச-மு. என்னாப்பென் அது?—ஓ !

[அதிலிருக்கப்பட்ட பழந்துணிகள், கந்தைகள், பழஞ்செருப்பு, துடப்பக் கட்டை முதலியவைகளை யெல்லாம் வெளியில் எடுத்து]

ஏம்பேன் ? யாருக்குப் பிரெசண்ட் (present) கொடுக்க இந்த ஆஸ்தி யெல்லாம் சேர்த்துவைச்சே ? பொங்கல் பண்டிகைக்காக பிரசண்டோ ? (present)—நம்ப நாயுடு காருகூட சிரிக்கராரு பாரு ! என்னெ எமாத்தப்பாத்த யல்லா ? இப்பொ யார் ஏமாந்தது ?

கி. அத்தான்,—நான்தான் ஏமாந்தேன்—நான்தான் தோத்துப்பூட்டேன், ஒப்புக்கரேன். இதெல்லாம் உங்களுக்கு என்னமா தெரிஞ்சுது? எல்லாம் சொல்லிடுங்க.

ச-மு. எல்லாம் சர் லாக் ஹோல்ஸ் அப்பேன்—

கி. அதெல்லாம் ஓதவாது, வாஸ்தவத்தெ சொல்லுங்க—நீங்கதான் கெலிச்சைங்கோ இண்ணு ஒப்புகனனே.

ச-மு. அப்படி கேளு—சொல்ரேன்—நேத்து ராத்ரி பூனமல்லி சத்திரத்துக்கு வந்தையா?—கந்தெ மூட்டையெ அதுலெ வைச்சையா ?—

கி. ஒரு வேளெ முழிச்சிகினு இருந்தைங்களா ?—இல்லாப்போனா அந்த சத்தரத்துப்பாப்பான் சொல்லிவுட்டானா?

ச. இல்லேங்கோ, அப்பாதான் கண்டு புடிச்சுது அதெல்லாம்.—உங்க சாவியெ கூட அப்பாதான் கண்டுபுடிச்சி எடுத்துது அங்கெ— நீங்க போட்டுட்டு பூட்டைங்களாமே—

கி. ஐ சி! (I see !) அது சரிதான்—இந்த மூட்டையெ நான் கொண்டாந்து ஒளிச்சிவைச்ச எடம் உங்களுக்கு என்னமா தெரிஞ்சுது ?

ச. அது மாத்திரம் அப்பா கண்டு பிடிக்கலெ—அண்ணி கண்டுபுடிச்சாங்க.

கி. யாரு?

ச. இதோ பாருங்களே ஒண்ணும்ணு—இதோ எழுதி யிருக்கராங்க—

[காகிதத்தை கிருஷ்ணசாமி கையில் கொடுக்கிருன்.]

ச-மு. அடடே!—

கி. [அதைப் படித்துப் பார்த்து] ஓ! அப்படியா சமாசாரம்!—என்ஞண்ணுலும் புருஷன்!—யூ தஸ் டர்ன் தி டேபில்ஸ் (you thus turn the tables) ஓ! அத்தான்!—இதுக்குதான் மேஜைங்களெ யெல்லாம் திருப்பிப் போட்டைங்களோ!—இதுக்குக்கூட அர்த்தம் தெரியலேயா? நான் உங்களெ ஏமாத்துரத்துக்கு பதிலா, நீங்க என்னெ ஏமாத்தலாம் இண்ணு அந்த இங்கிலீஷ் இடியம் (English idiom) எழுதி யிருந்தா, உங்களெ மேஜையையா திருப்பிப் போடச் சொல்லிச்சி! [சிரிக்கிருன்.]

ச-மு. ஏ!—எனக்கு தெரியாதோ அதெல்லாம்? உனக்கு இப்படி யெல்லாம் நான் செய்யப்போரேன் இண்ணு ஒரு ஹின்ட் (hint) கொடுக்கிறதுக்காக ஐ டர்ன்ட் தி டெபில்ஸ் (I turned the tables).

தி. ஏமண்டி! நேனு வஸ்தானண்டி--அவசரங்கா போவாலா. (நானு வர்ரேனுங்க—அவசரமா போவணும்)

கி. ஏமண்டி அவசரம்?

தி. கடுபுலொ ஒக மாதிரி உண்டாதண்டி. (வயத்திலே ஒரு மாதிரியா இருக்குதுங்க.)

ச-மு. ஆமாம், தொவையலேயும் தோசையையும் சும்மா திண்ணு!—அது செரிக்கலேயோ என்னமோ—அந்த ஓமம் வாடர் கொஞ்சம் கொடுப்பேன்—அடடே! என்ஞ ஒண்ணேயும் காணோம் அந்த புட்டியிலெ!

தி. ரெண்டு தின முலகா பெள்ளுகு போலேது, அது மஞ்சி மந்து அனு செப்பிதிரெ அனி போஞ்சேஸ்தினண்டி. (ரெண்டு நாளா வெளிக்கு போவலே—அது நல்ல மருந்துண்ணு சொன்னீங்களே இண்ணு சாப்பிட்டேட்டேன்)

ச-மு. அதுக்கா இந்த மருந்தெ சாப்பிட்டைங்க !—சரிதான்—இப்பவாவது நான் சொல்ரது கேளண்டி, வீட்டுக்குப் போயி கொஞ்சம் சித்தாமணக்கெண்ணெ சாப்பிடண்டி.

கி. வஸ்தானண்டி.

தி. நாயுடுகாரு! எல்லுண்டிகி மாட்டு பொங்கிலிகி வஸ்தாருகதா ? (நாளைநண்ணிக்கி மாட்டு பொங்கலுக்கு வர்ரைங்கல்லவா ?)

தி. வஸ்தானு வஸ்தானு. [விரைந்து போகிறார்.]

ச. என்னுங்க ? தோசெ திண்ணாட்டு கஷ்டப்படாரு. நீங்க இன்னம் எள்ளுண்டெ சாப்பிடரத்துக்கு வரச் சொல்ரைங்களே !

கி. எள்ளுண்டைக் கல்லாடாப்பா !—எல்லுண்டிகி இண்ணு, நாளநண்ணைக்கி இண்ணு அர்த்தம்.—அதிருக்கட்டும்—இந்தாங்க அத்தான்—பந்தயம் போட்ட ரூபா—
[ஒரு ரூபாயைக் கொடுக்கிறான்.]

ச-மு. இந்தாடா சபாபதி ரூபா கேட்டையே.
[ரூபாயைக் கொடுக்கிறார்.]

ச. இந்தாடா தம்பி, நான் தோத்துப்போன ரூபா.
[ரூபாயைக் கொடுக்கிறான்.]

ரா. தாப்பா எனக்கு பைன் (fine) போத்தையெ அந்த ரூபா. [ரூபாயைக் கொடுக்கிறான்.]

கி. சரி ! கொடுத்த ரூபா வந்து சேந்துபோச்சி !

ச-மு. வந்த இடத்துக்கு எல்லாம் போய் சேரவேண்டியதுதானேப்பேன்.

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி.

இடம்—சபாபதி முதலியாருடைய மாமனார் வீட்டின் மேல்மாடி. காலம்—காலே.

சபாபதி முதலியார் உடுத்திக்கொண் டிருக்கிறார்.

கிருஷ்ணசாமி அருகில் நிற்கிறான்.

கி. சிக்கிரம் டிரெஸ் (dress) பண்ணிகிங்க; அதோ கீழெ வா ஆரம்பிச்சூட்டாங்க, கூடுமானவரைக்கும் நாயிறு இல்லெ நாளைக்கு வாங்க இண்ணு சொல்லி அனுப்பிச்சூடரேன், அத்தெ கேக்காதே தொந்தரவு பண்ரவங்களே யெல்லாம் இங்கெ உங்ககிட்ட அனுப்பிச் சூடரேன், நீங்க பாத்துங்க.

ச-மு. நீ ஒண்ணும் பயப்படாதெ அப்பேன். ஒவ்வொருத்தருக்கும் என்னமாறு குல்லா போட்டனுப்பிச் சூடரேன் பாரு—அதிருக்கட்டும். எனக்கொரு யோசனெ சொல்லு பாக்கலாம்—இந்த நாட்டு புறத்துலெ கூட நானு டிரெஸ் (dress) பண்ரமாதிரி எல்லாரும் டிரெஸ் (dress) பண்ராங்க, ஏதாவது புதுமாதிரி சொல்லு பாக்கலாம், நானு காலர் (collar) நெக் டை, கோட் (neck-tie, coat) எல்லாம் போட்டா, மற்றவங்களும் போடராங்க அப்படியே, நான் ரிஸ்ட்வாச் (wrist watch) போட்டா மற்றவங்களும் ரிஸ்ட்வாச் போடராங்க; ஏதாவது புதிமாதிரியா யிருக்கணும்—என்னெ பாக்கரவங்கல்லாம்—ஹா! இது யார் இது? பட்டணத்து முதலியாரா இருக்குது—இண்ணு சொல்லணும்.

கி. அதுக்கொரு யுக்தி சொல்ரே கோவிச்சிக்காதைங்க?

ச-மு. நான் ஏன் கோவிச்சிக்கரேன்? சொல்லப்பேன்.

கி. இந்த டிரஸ் எல்லாம் போட்டுகிணு, தலெ குட்டையெ மாத்திரம் கயிட்டி வைச்சூடுங்கீ—

[கதவண்டைப் போய்க்கொண்டே]

தலைக்கு யாத்திரம் ஒரு வைக்க பிரியெ சுத்துகிங்கோ—அல்லாரும் கேப்பாங்க! யாரு இந்த முதலியா ரிண்ணு!—
[விரைந்து கீழே போய்விடுகிறான்.]

ச-மு. கிருஷ்ணசாமி சொல்ரது வாஸ்தவம்தான்— நம்பொ அந்த கேள்வி கேட்டிருக்கக் கூடாது.
[முகத்தைக் கண்ணாடியில் பார்த்து]
பொட்டு இடலெ—அடெ சபாபதி! எங்கேடா சாந்து?

சபாபதி வருகிறான்.

ச. இதோப்பா.

ச-மு. எத்தனி நாழிடா இத்தெ கொண்டார?

ச. இல்லெப்பா, நான் திரெஸ் (dress) போட்டுகினு இருந்தேம்பா.

ச-மு. ஓ! ரைட் (oh! right) சரிதான்—நான் பொங்கலுக்கு புதுசா தைச்சி கொடுத்த கோட் (coat) டா இது?

ச. ஆமாம்பா—அதாம் சொல்ல வந்தேம்பா. நானு அப்பவே சொன்னனேப்பா அந்த துலுக்க தையக்காரனுக்கு ஜல்லடம் தான் தைக்க தெரியும் கோட்டுத் தைக்க தெரியாதிண்ணு.

ச-மு. ஏண்டா, சரியா தானெ தைச்சி இருக்கரான்.

ச. என்ன தைச்சாம்பா அவன்!—அல்லாம் தப்பா வைச்சிருக்கரான்.—இதொ பாரப்பா—மேலெ ஒரு துவாரம் அதிகமா வைச்சான்!—இந்த பக்கம் கீழே ஒரு பொத்தான் அதிகமா வைச்சான்!

ச-மு. பொடா டன்ஸ்! (dunce) பொத்தாசெ தப்பா போட்டுட்டு அவம்பேர்லெ சொல்ரையா? பொத்தாசெ அவுத்து சரியா போடு. [சரியாகப் போட்டு காண்பிக்கிறார்.]
இத்தெ சரியா போட பொழுசு இல்லாதே வாயெப் பாரு—

ச. ஆமாம்பா!—நீ சொன்னது சர்தாம்பா—ஒனக்கு கூட கொஞ்சம் புத்தி யிருக்குதப்பா!

ச-மு. ஏண்டா! அதனப்பிரசங்கி! ஒதெ கிதெ கேக்குதா என்ன?

ச. ஏ! நீ ஓதச்சா நானு பட்டுகிறேன். இதுக்கேம்பா கோவிச்சிக்ரையே!

ச-மு. சரிதான்:—அதோ யாரோ வர்ராப்போலெ இருக்குது—வர்ரவங்களெ யெல்லாம் வேடிக்கெ பண்ணி அனுப்பிச்சூடணும்—பத்திரமா யிரு, கிரிக்க கிரிக்க போரெ!

தினகராசாரி நாயுடு படி வழியாக வருகிறார்.

ச. வண்டி! வண்டி!

ச-மு. என்னதுடா அது வண்டி?

ச. நாயுடு வர்ராரு அப்பா, அதுக்கு சொன்னேன்.

ச-மு. அதுக்கு வண்டி என்ன?

ச. நீ சொன்னையேப்பா, அல்லாத்துக்கும் டி சேத்தா தெலுங்கா பூடும் இண்ணு—பொ இண்ரத்துக்கு பொண்டி—ஊம்—

ச-மு. வா இண்ரத்துக்கு வண்டியா?—முட்டாள்!—ரண்டி நாயுடுகாரு—உக்காரண்டி—என்ன சமாசாரண்டி?

தி. ஏமிலேது பொங்கலிகி ஒஸ்தினி (ஒன்றுமில்லை பொங்கலுக்காக வந்தேன்.)

ச. நாயுடுகாரு! இண்ணைக்கி பொங்கல் பண்ணலெங்க—இட்லிதாம் பண்ணுங்க காலமே.

ச-மு. அடெ மடையா! ஒண்ணும் தெரியாப்பொன குறுக்கே பேசாதே? பொங்கலுக்காக என்னெ பாத்தூட்டுப் போக வந்திருக்காரு இண்ணு!—நாயுடுகாரு, அவன் சொல்ரத்தெ கவனிக்காதண்டி.

தி. லேதண்டி—கிந்த ஒஸ்தினி, கிருஷ்ணசாமி மொதலாரு, பைன போயி கூர்சண்டி அவதல ஒஸ்தானு அனி செப்பி

ஞரு—அதா ஒஸ்தினி (கீழே வந்தேன், கிருஷ்ணசாமி மொதலியார் மேலெ போயி உக்காருங்க, அப்பறம் வர்ரேன் இண்ணு சொன்ஞரு, அதாம் வந்தேன்)

ச-மு. சரிதாண்டி— உக்காரண்ம— அதிருக்கட்டும். இதேமி நாயுடுகாரு கோட்டெ (coat) திருப்பி போட்டுகிஞரண்டி?

தி. லேதண்டி.—ஆ குட்ரபுவாடு திப்பி குட்டேசினாடு— தானி கோசரம் திப்பிவேசு கொண்டினி. (இல்லெங்கோ—அந்த தையக்காரன் துணியெ திருப்பி தச்சி உட்டான்—அதுக் கோசரம் திருப்பி போட்டுகனேன்.)

ச-மு. ஐ சி! (I see!) அதுவும் ஒரு ஒரிஜினல் ஐடியா (original idea) தான்— நாயுடுகாரு எனக்கொரு யோசனெ தோணுது— இப்புடு யாரஞ ஒஸ்தாரு, அப்பொ நானு எது கேட்டாலும் லேதண்டி அனி சொல்விடண்டி.

தி. அட்லனே.

ச-மு. கையிலெ ஒரு லெக்க (கணக்கு) புஸ்தகம் இருக்கராப் பொலெ ஈ புஸ்தகம் வைச்சிகண்டி.

[ஒரு புஸ்தகத்தைக் கொடுக்கிருர்.]

ச. அப்பாப்பா! யாரோ ஒரு பெரிய தொப்பெ வருதப்பா.

பெல்லியப்ப கவுண்டன் வருகிருன்.

ச-மு. யாரையா அது?

பெ. நான் தான் பெல்லியப்ப கவுண்டன்.

ச-மு. உங்க பேரு நீங்க சொல்லாமலெ தெரியுது—என்ன சமாசாரம்?

பெ. ஒண்ணும் விசேஷமில்லெ—சும்மா பாத்துவுட்டு போகலாமிண்ணு வந்தேன்.

ச-மு. என்னையா?

பெ. ஆமாம்.

0.2:56
24937

ச-மு. வேறொண்ணு மில்லையே ?

பே. வேறொண்ணுமில்லெ.

ச-மு. ஆனா—நண்ணைப் பாத்துட்டுப் பொங்க—

[எழுந்திருந்து திரும்புகிறான்.]

கண்ணு பாத்தாச்சா ?—போய் வாங்க.

பே. ஊம்—மாமா ஊர்லெ இல்லையொ ?— நாளைக்கு வருவாங்களா ?

ச-மு. ஏன் ஐயா—நான் அப்பவே கேட்டனே—வேறொண்ணு மில்லெண்ணு சொல்லிவிட்டு, இப்பொ இந்த கேள்விங்கல்லாம் கேக்கறைங்களே ? என்கிட்ட யாரும் பொய் பேசக்கூடாது; அப்புறம் எனக்கு கோவம் வரும்; போய் வாங்க.

பே. ஊம்—வர்ரெனுங்க. [போகிறான்.]

ச. ஏம்பா? அவரெ மாத்திரம் பொய் பேசக் கூடாதிண்ணையே—நீ மாத்திரம் பொய் பேசலாமோப்பா ?

ச-மு. நானு எங்கெடா பொய் பேசனேன் ?

ச. அவர் பேரு சொல்ரத்துக்கு முன்னயே தெரியும்ணையே?

ச-மு. ஆமாம்— தொப்பெயே பாக்கும்போதே தெரிஞ்சிகினேன்—முட்டாள்! பெல்லி இண்ணு என்னடா அர்த்தம் தெரியுமா ?— தொப்பைக்கி இங்கிலீஷ் சொல்லு பாக்கலாம் ?

ச. பெல்லி இண்ணு தொப்பையா ?—அப்பாப்பா! இன்னொர்த்தர் வர்ராரு அப்பா—

குப்பையர் வருகிறார்.

கு. மஹாப் பிரபு. [உட்கார்ந்து பாடுகிறார்.]

ச-மு. ஐயோ பாவம்! ஐயா,—கொஞ்ச நிதானிக்கிங்க—சமாதானம் பண்ணிங்க—மனசெ தைரியம் பண்ணிகிங்க—போதும்—கொஞ்சம் நிறுத்துங்க—

[குப்பையர் பாட்டை நிறுத்துகிறார்.]

எதுவாயிருந்தாலும் பொறுத்துக்கணும்—நீங்க கேட்ட தில்லையா? பொறுமை எருமையினும் பெரிது இண்ணு—ஊம், உங்க பேர் என்ன?

ச. கந்தையர் அப்பா, இவர் பேரு.

ச-மு. அடே அதனப்பிரசங்கி வாயெ மூடு!

கு. ஊம் பேர் குப்பையர்.

ச-மு. அது இருக்கட்டும், இத்தனி நாழி ஏன் அழுதைங்க?

ச. நான் எங்கெ அழுதேன்?—கொஞ்சம் பாடனேன்.

ச-மு. ஓ! ஐ சி (O I see) பாட்டா அது?—சரிதான்—என்ன விசேஷம்?

கு. சங்கிராந்திக்கு வீந்து ஏதாவது பாடணு—பெரிய மொதலியாரு ரெண்டணு கொடுக்கிற வழக்கம்— அவர் இல்லெண்ணு—உங்ககிட்ட கொஞ்சம் பாடி ஏதாவது வாங்கிகினு போவணும்ணு வந்தே—கொஞ்சம் கேக்கணும்—

[பாட ஆரம்பிக்கிறார்.]

ச-மு. ஐ ஐயா! நிறுத்துங்க! நிறுத்துங்க!—நான் சொல்ரத்தெ கேளுங்க. பாடரத்துக்கு மாமா உங்களுக்கு என்ன கொடுக்கர வழக்கம்?

கு. ரெண்டணு கொடுப்பாருங்க.

ச-மு. இப்பொ பேசாதே போயி நாளைக்கு வாங்க—பாடாதே இருக்கிறத்துக்கு மாமா கிட்ட சொல்லி நாலணு கொடுக்கச் சொல்ரேன்.

கு. உத்தரவு. [போகிறார்.]

ச-மு. ஏண்டா சபாபதி? என்ன பிராமணரெ அப்படி திட்டனையே?

ச. நான் திட்டலேப்பா! கந்தெ கட்டிகினு இருந்தாரே அத்தெ தொட்டு கந்தையர் இண்ணு பேரு இருக்கும் இண்ணு நெனைச்சிகினேம்பா.

கிருஷ்ணசாமி அமிர்தலிங்க ஜோஸ்யரை அழைத்துக் கொண்டு வருகிறான்.

கி. அத்தான்—இவரெ உங்களுக்கு தெரியாதே?—இவர்தான் இந்த ஊர் ஜோஸ்யர், உங்களுக்கு ஜோஸ்யம் சொல்

லனும் இண்ணு ரொம்ப இஷ்டமாயிருக்குதாம். அழைச்சிகினு வந்தேன்—நீங்க பேசிக்கிங்க—நான் வர்ரேன்—
[போகிருன்.]

அ. மொதலியாரவாளே ரொம்ப நாளா பாக்கணும் இண்ர அபேட்சை, இண்ணெக்கி கிடைச்சுது, நல்ல நாள், மாட்டுப் பொங்கல்— [மூட்டையை பின்பக்கமாக வைத்துவிட்டு உட்காருகிருர்.]

ச-மு. சந்தோஷம்.

அ. தங்கள் ஜாதகம் இருக்கோ இங்கே?

ச-மு. எங்கள் தகப்பனர் அநேகம் பேர் ஜோஸ்யருங்க வந்து ஜாதகத்துக்காக தொந்தரவு பண்ராங்க இண்ணு அத்தெ யெல்லாம் கிழிச்சி போட்டுட்டார்; இருந்தாதானே கேப்பாங்க?

அ. பரவா யில்லெ—கை ரேகையெ பார்த்து நான் சொல்லி விடுவேன். கொஞ்சம் வலக்கையைக் காட்டணும்.
[சபாபதி முதலியாரின் கையைப் பார்க்கிருர்.]

ச. ஏம்பா? நீ பெரு விரலெ பாத்து என்னமோ சொல்ரையே அந்த மாதிரிதான் இவரும் சொல்லுவாரோ?

ச-மு. அடெ சத் பேசாதே!

அ. உங்களுக்கு வயசு இப்போ—இருபத்தொண்ணுகுதுங்க—உங்க தகப்பனர் போன வருஷம் காலமாய் விட்டார்—அவருக்கு அப்பொ வயசு அறுபத்தாறு, உங்களுக்கு தம்பிகளில்லே—கூடப் பிறந்தது ஒரு சகோதரிதான்—சரிதானுங்களா?

ச-மு. ரொம்ப சரி!

ச. ஏம்பா, இதானும் ஜோஸ்யம்?—இதெல்லாம் நானு கூட சொல்லி விடுவேனே?

ச-மு. அடே அதனப்பிரசங்கி! நீ கீழே போ! குறுக்கே குறுக்கே பேசிகினு—
[சபாபதி போகும்பொழுது மெல்ல ஜோஸ்யர் மூட்டையைத் தூக்கிக்கொண்டு போய்விடுகிருன்.]

ஜோஸ்யரே, அவன் சொன்னதும் ஒரு விதத்திலே

வாஸ்தவம் தானுங்க. இனி மேலே நடக்கப்போகிற சமாசாரத்தை சொல்லுங்க பாக்கலாம்.

அ. [மறுபடியும் கையைப் பார்த்து] உங்களுக்கு கொஞ்ச காலத்துலே பெரிய பட்டப்பேர் கிடைக்கப்போகுது.—நாலு பிள்ளே—நாலு பெண்—பிறக்கப் போகுது. மஹாத்தான ஐஸ்வர்யம் வரப்போகுது—

ச-மு. சர்தான்—மற்ற ஜோஸ்யருங்களே போலேதான் இருக்கரைங்க நீங்களும்—இப்பொ நான் ஒரு விஷயத்துலே ஜோஸ்யம் கேக்கரே, அத்தெ சொல்லுங்க பாக்கலாம்.

அ. கேளுங்க.

ச-மு. இப்பொ— நீங்க— இங்கே இண்ணேக்கி வந்தத்துக்கு என்ன தட்சிணெ கொடுக்கப்போரேன்? அத்தெ மாத்ரம் சொல்லி விடுங்க.

அ. [ஒரு புறமாய்] ஏது, மொதலியார் தேவலேயே!—இப்படி சொல்லிப் பாக்கலாம்—மொதலியார் அவாள், இண்ணேக்கி எனக்கு ஒண்ணும் கொடுக்கிறதில்லெ இண்ணு நினேச்சிண்டிருக்கிறீர்கள்.

ச-மு. ரொம்ப ரைட் (right) மற்ற சமாசாரம் எனக்குத் தெரியாது, இது மாத்திரம் ஜோஸ்யம் சரியா சொல்லிட்டைங்க—மெத்த சரி, அப்பொ— உத்தரவு வாங்கிக்கலாமே—அடெ சபாபதி!

ச. [கீழிருந்து]. ஏம்பா!

ச-மு. தாம்பூலம் கொண்டாடா.

அ. மொதலியாரவர்களுக்கல்லவா—நான் இருக்கிறது பக்கத்து கிராமம்—போக வண்டி. சத்தமாவது-கொடுத்தா—

ச-மு. அடடா! பாத்தைங்களா! அத்தெ இப்பொ கேக்கலாமா? ஒரு வேளெ நானு கொடுத்தேன், அந்த ஜோஸ்யம் தப்பா போகும்—அப்பறம் உங்க ஜோஸ்யத்தெ யாரும் நம்பமாட்டங்க—அத்தொட்டு உங்க ஜோஸ்யத்தெ ரூபிக்கிரத்துக்காவது—சும்மா பூங்க.

சபாபதி தாம்பூலம் கொண்டு வருகிறான்.

ச-மு. [தாம்பூலம் கொடுத்து] வாங்க.

அ. [மூட்டையைத் தேடிப் பார்த்துக் காணாது] என் மூட்டை ஒண்ணு வைச்சிருந்தேன்—இங்கே வைச்ச கவனமாயிருக்குது.—

ச-மு. அடே, அவரு மூட்டையெ காணமாம் தேடிப் பார்த்து எடுத்து கொடுத்தனுப்பு.

ச. நான் என்னாத்துக்கப்பா தேடாது? அவர்தான் ஜோஸ்யராச்சுதே—ஜோஸ்யத்லே பாத்து கண்டு பிடிக்கச் சொல்லப்பா. [கண்ணால் மறைவாக சைகை செய்கிறான்.]

ச-மு குவைட் ரைட்! (quite right) அவன் சொல்ரதும் சரி தானுங்களே! உங்களுக்கென்ன கஷ்டம்? மூட்டை எங்கே யிருக்குது இண்ணு ஜோஸ்யம் பாருங்களேன் உடனே.

ச. அதெப்படி முடியுங்க—கொஞ்சம்—தயவுபண்ணணும்—

ச-மு இவ்வளவுதானா உங்க ஜோஸ்யம்?

அ. மொதலியாரவாள்—அப்படி சொல்லிவிடக் கூடாது—ஏழைப் பிராம்மணன்—ஏதோ வயத்துப் பிழைப்புக்காக—இப்படி—

ச-மு. அத்தெ முன்னேயே சொல்ரதுதானே. இந்த ஜோஸ்யம் எல்லாம் என்னையா? அடெ சபாபதி, அவர் மூட்டையெ அவர் கிட்ட கொடுத்தனுப்பிச்சூடு—போங்க.

[சபாபதி அமிர்தலிங்க ஜோசியரை அழைத்துக் கொண்டு போகிறான்.]

சிதம்பரத்து அடிகள் மெல்ல வருகிறார்.

சி. சிவ சிதம்பரம்!

ச-மு. இங்கிலீஷ் சென்னபட்டணம்!

[எழுந்து உட்கார்ந்து நியூஸ் பேபர் (News Paper) படிக்கிறார்.]

சி. [கொஞ்சம் பொறுத்து] உம்—உம்! [கனைக்கிறார்.]

[சபாபதி முதலியார் தானும் கனைக்கிறார்.]

மொதலியாரவாள்!

ச-மு. என்ன சமாசாரம்?

சி. சிதம்பரத்துலிருந்து வந்திருக்கிரேன் இண்ணு தெரிவிச்சேன்.

ச-மு. அதுக்கு நான் அப்பவே சென்னபட்டணத்திலிருந்து வந்திருக்கிரேன் இண்ணு பதில் தெரிவிச்சூட்டேனே?

சி. ராமேஸ்வரம் யாத்திரை போகலாமிண்ணு இருக்கரேன்.

ச-மு அது நல்ல யோசனெ—போய் வரலாம் உடனே—

சி. அதுக்கேதாவது—இங்கே—கொஞ்சம் வழி காட்டணும்.

சபாபதி மறுபடி வருகிறுன்.

ச-மு. அதுக்கென்ன தடை?— அடெ சபாபதி, வழியிலே குறுக்கே நில்லாதே—ஒதுங்கு. இந்த படி வழியா கீழே போனீங்கண்ணு தெருவிலே கொண்டுபோய் விடும்—அங்கிருந்து தெற்குபக்கமா நோக்கி போனு ராமேஸ்வரம் போகுது வழி.

சி. ஊம்—நானு வர்ரேனுங்க.

ச-மு. சந்தோஷமா. [சிதம்பரத்து அடிகள் வேகமாய்ப் போகிறுர்.]

தி. ஹா! ஹ்ா!! ஹா!!! [சிரிக்கிறுர்.]

ச-மு. ஏமி நாயுடுகாரு—ஏமி சிரிக்கரைங்க?

தி. பெத்த பொட்டவேசுகொனி ஒச்சினுடெ ஒகடு, அதி தலுசு கொண்டே நவ்வு ஒஸ்தாதண்டி. (பெரிய தொப்பை போட்டுக்கொண்டு வந்தானே ஒருத்தன், அதை நினைத்துக்கொண்டால் சிரிப்பு வருதுங்க.)

ச-மு. அத்தையா இப்பொ நெனைச்சிக்கினீங்க? உங்க ஊட்டுக்குப் போயல்லவோ நினைச்சிகிவைங்க இண்ணு பாத்தேன்?

ச. அடடா! என்னுயா அது? உங்க சிரிப்புலே இங்கி புட்டியெ ஊத்திவிட்டைங்களே?

தி. [மெதுவாய்] செப்ப ஒத்து! செப்ப ஒத்து! (சொல்ல வேண்டாம்) [தன் கைகுட்டையால் மேஜையின்மீது விழுந்த இங்கியைத் துடைத்துவிட்டு, தன் ஜேபிக்குள் கைகுட்டையைப் போட்டுக் கொள்ளுகிறுர்.]

வெற்றிவேற் கவிராயர் வருகிறார்.

வே. மொதலியார் அவாள், க்ஷேமம் தானே ?

ச-மு. க்ஷேமம்.

வே. பொங்கல் பொங்கிச்சுங்களா ?

ச-மு. பொங்கிச்சி — தாங்கள் யாரோ தெரியலே.

வே. என் பெயர் வெற்றிவேற் கவிராயர் —

ச-மு. ஓ ஐ சீ! (Oh! I see) வெட்டிவேர் வியாபாரம செய்யராப்போலெ யிருக்குது ?

வே. இல்லேங்க! என் பெயர் வெற்றிவேல்.— வெற்றிவேல்— வெட்டிவேர் அல்ல. நான் ஒரு கவிராயர்.

ச-மு. நீங்க கவிங்களெ யெல்லாம் ரோயரதோ ?—யார் அதெ கட்டரது ?

வே. நானே கட்டுவேனுங்க— உங்களைப் பார்க்கவேண்டு மென்று வெகு நாள் ஆவல், பெரிய மனுஷாள் வீட்டில் அதிக காவல்—தங்கள் கையிலிருப்பது யாதோ ஓர் நாவல்—

ச-மு. தாங்கள் வந்த விசேஷம் என்ன ?

வே. நான் பிறந்து வளர்ந்தது தில்லை, பிறகு கடந்து வந்தேன் அதன் எல்லை, தற்காலமிருப்பது திரு முல்லை, பஞ்ச காலத்தில் அங்கே சாவிக்கோல்லை, நெடுநாளாயது கண்டு நெல்லை, கடப்பது கடினம் ஓர் அல்லை, மனையாள் கொடுக்கிறாள் வெகு மல்லை, பிள்ளைகள் இளிக்கின்றன பல்லை, தாங்கள் ஏற்கவேண்டும் என் சோல்லை.

ச-மு. நீங்கள் கொடுப்பது வெகு தோல்லை, நான் கொடுப்பது ஒன்று மில்லை !

வே. அடடா! மொதலியார் அவாள் தமிழ் ரொம்ப படிச்சிருக்கராப்போலெ யிருக்குதே !

ச-மு. இல்லெ, கொஞ்சம் படிச்சிகினு வரேன்.

வே. சந்தோஷம், தற்காலம் ஏதாவது நூலாராய்ச்சியுண்டோ?

ச-மு. உண்டு.—இப்பொ ஆத்திசூடி ஆராய்ச்சி பண்ணி வரேன்.

வே. ஆத்திசூடியா?—அதுலெ அவ்வளவாக ஒன்றுமில்லையே?

ச-மு. அப்படி சொல்லி விடாதைங்க—அதுலெ ரொம்ப விஷயங்க ளிருக்கின்றன— பாருங்க— இப்பொ நாம்பொ ஆடரமெ சீட்டு—அது வெள்ளைக்காருங்கதான் உண்டு பண்ணது—பிரான்சு (France) தேசத்தில் உண்டானது முதல் முதல்—இண்ணு சொல்ராங்க. நம்ம தேசத்திலே அவ்வையார் காலத்துலெ கூட அது இருந்துது இண்ணு ஆத்திசூடியிலுலே ரூபிக்கலாம் நம்போ.

வே. எப்படி? எப்படி?

ச-மு. நன்மெ கடைப்பிடி, இண்ணு ஆத்திசூடியிலே சொல்லியிருக்குது—கடைசி பிடி ரொம்ப நல்லது இண்ணு, அதாவது இப்பொ, மறியன்ஸ் (Mariens) பிசிக் (Bezique) முதலிய ஆட்டங்களுக்கு கடைசி பிடிக்கி பத்து. அந்த காலத்துலெ இந்த ஆட்டங்கள் எல்லாம் இருந்தத் தொட்டுதான் நன்மை கடைப்பிடி இண்ணு அவ்வையார் எழுதி யிருக்கணும்.

வே. அதற்கு— நன்மை கடைப்பிடி இன்றதற்கு— வேறெ அர்த்தம் சொல்லுகிறார்களே.

ச-மு அதெல்லாம் தப்பு—அது கூடம் தெரியும் எனக்கு, கடையிலே விற்கும்படியான பொடி நல்லது என்று சொல்ராங்களே அத்தெ சொல்ராங்க நீங்க, அதுதப்பு —அவ்வையாரையாவது பொடி போடும்படியா சொல்லுவாங்களா? அது தப்பு. நீங்க நாளைக்கு வந்துடுங்க— இண்ணைக்கு மாமா இல்லெ—

வே. இப்பொ, ஏதாவது—கொஞ்சம்—

ச-மு. பாருங்க—நான் பொய் பேசரதில்லெ இண்ணு ஒரு ஏற்பாடு பண்ணிகினு இருக்கரேன், இப்பொ என்னமாவது உங்களுக்கு கொடுத்தா— முன்னெ நான் கொடுப்பது ஒன்றுமில்லை—இண்ணு சொன்னது பொய்யா பூடும்— அது தப்பு. சமஸ்கிரதத்லே சொல்லி யிருக்குது பாருங்க—யதார்த்தவாதி போஜனவிரோதி இண்ணு—

வே. சம்ஸ்கிரதம் கூட படிச்சியிருக்கராப்போலெ இருக்குது.

ச-மு. கொஞ்சம் பரிஜனம் உண்டு—சபாபதி, இவருக்கு தாம்பூலம் கொடுத்தனுப்பு.

வே. என்னுங்க! என் செருப்பைக் காணோமே!— புது செருப்புங்க.

ச-மு. என்ன ஐயா, கவிராயர்களுக்குச் செருப்புகள் தானா குறை? கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் செருப்பு என்று பாடி யிருக்கராங்களே, எங்கே போனாலும் உங்களுக்குக் கிடைக்குது.

வே. அதோ! கீழே நாய்குட்டி தூக்கிக்கொண்டு போகுதுங்கள்—நான் வருகிறேன். [போகிறார்.]

நாயுடுகாரு— என்ன செய்யலீங்கண்டி?— என்னடா தூங்கராரா என்ன?

ச. ஆமாம்பா.

ச-மு. அடெ சபாபதி, அவர் தலெகுட்டையெ அப்படியே அந்த நாற்காலியிலே கயத்தாலே புடிச்சி கட்டிவிடு— வேடிக்கெ பாக்கலாம். [சபாபதி அப்படியே செய்கிறான்.]

கிருஷ்ணசாமி விரைவாக வருகிறான்.

கி. அத்தான்! அத்தான்! இதுவரையிலெ வந்தவங்களெல்லாம் ஏமாத்தனது பெரிசல்ல—அதோ எங்க வயித்தியர் வர்ராரு மொள்ள—பெரிய தொணு தொணுப்பு! என்ன சொன்னாலும் போகாது, அவரெ ஏமாத்தனீ தானா உங்களுக்கு கிரெடிட். (credit)

ச-மு. ஆனா—நான் ஒரு யுக்தி சொல்ரேன் கேளு—என்னோடெ பேசனது இல்லெ அவரு, அவர்கிட்ட நான் பெரிய செவிடு இண்ணு சொல்லி அனுப்பு சொல்ரேன்.

கி. ஆவட்டும்! ஆவட்டும்! அதோ கீழெ வந்துகினு இருக்கிறார். [கீழே போகிறான்.]

ச-மு. அடெ! சபாபதி! நான் என்ன சொன்னாலும் சிரிக்க கிரிக்க போறெ! பத்ரம்.

ச. இல்லெப்பா.

வைத்தியர் குப்புசாமி முதலியார் வருகிறார்.

கு. [உரக்க] மாப்பிள்ளெ—க்ஷேமம் தானா?

ச. ஐயாவுக்கு காது கொஞ்சம் கேக்காது, கொஞ்சம் உரக்க பேசுங்க.

கு. இன்னுமா உரக்க பேசணும்?—[இன்னும் உரக்க] க்ஷேமந் தானா?

ச-மு. ரெண்டு நாளைக்கு முன்னே தான் வந்தேன்.

ச. நான் சொன்னனுங்களெ— இன்னும் கொஞ்ச உரக்க பேசணும் நீங்க.

கு. சரி! என் தொண்டெ கிழிஞ்சிதாம் போவும்— [மிகவும் உரக்க] சவுக்கியம் தானுங்களா?

ச-மு. மாமாவா?—ஊர்லெ இல்லெ.

கு. இதென்னடாப்பா கஷ்டம்! அதிர்வேட்டு போட்டா, என்னா பொகையரது இண்ணு கேப்பார் போலெ இருக்குதே?- [காதருகில் போய் மிகவும் உரக்க] கேக்குதுங்களா?

ச-மு. ஊம்! [தலையசைக்கிறார்.]

கு. [காதருகில் உரக்க] வழக்கம்ா— வருஷா வருஷம்— இண்ணைக்கி—உங்க மாமாவெ வந்து கண்டுகினு போரது— அவர் மாமூலா கொடுக்கிற வழக்கம்— அவரு ஊர்லெ இல்லையாம்— தம்பியெ கேட்டேன்—உங்களே போயி பாக்கச் சொன்னாரு—பொங்கல் அல்லா? கேக்குதுங்களா?

ச-மு. பொங்கல்? பொங்கல்?

கு. அப்பா!— ஆமாம், பொங்கல் அல்லா?

ச-மு. நேத்து பொங்கல்லெ முந்திரி பருப்பெல்லாம் எடுத்தூட்டுதான் சாப்பிட்டேன்— அது பித்தவாய்வு இண்ணு சொல்ராங்களே—

கு. வெடிஞ்சுது போ!—என் தொண்டையெல்லாம் போச்சு —எண்டாப்பா நீயாயாவது சொல்லேன்!

[சபாபதி கையால் சைகை செய்கிறான்.]

ச-மு. கீழே போய், பொங்கல் ஆ...தா சாப்பிட...

கு. தலை விதி ! [தலையில் அடித்துக் கொள்ளுகிருர்.
அடே அப்பா, உனக்கு சரியா சைகை காட்டத் தெ-
யலே—நான் காட்டிப் பார்க்கிறேன்

[சைகை செய்கிருர். அதற்கு பதிலா சபாபதி முதலியார் மூன்று விரலால சைகை காட்டுகிருர்.]

ச-மு. என்ன ஐயா, நாயுடு—என்ன சொல்ராரு?—எனக்கா புத்தியா யில்லெ?

தி. லேதண்டி.

கு. என்ன இழவாயிருக்குது !— உனக்காவது அர்த்த மாகுதா, என்னமோ மூன்றி விரலைக் காட்டுகிருரே— மூன்று ரூபாயா கொடுக்கச் சொல்ராரு எனக்கு ?

ச. [சபாபதி முதலியாரிடம் சைகை செய்ய, மறுபடியும் அவர் பதிலாக மூன்று விரலால் சைகை செய்கிருர்.] மூணு வர்ஷமா இந்த மாதிரி செவிடா யிருக்குது இண்ணு உங்க கிட்ட சொல்லச் சொல்ரார்—

கு. சரிதான் ! இந்த சனியனே கட்டிகினு அழுரத்தோடே, வேறே எங்கேயாவது நாலு வூடு போயி பாக்கலாம்— நான் வர்ரென். [புறப்படுகிருர்.]

ச. ஏய்யா ! வயித்யரே ! என்ன எங்க எஜமானெ சனிகினிண்ணு திட்டரைங்க— அவங்க மாமா வரட்டும் நாளைக்கு, நீங்க திட்டனத்தெ சொல்ரேன். ஆவட்டும் ஆவட்டும் !

கு. அடடெ ! இங்கெ வாடாப்பா ! நான் என்னமோ வா... தவறி சொல்லிவிட்டேன்—அதெ யெல்லாம் பெரியவா கிட்ட சொல்லாதே—இங்கே வா சொல்ரேன்—ஒரு ரகஸ்யம். [அவனே அழைத்துக்கொண்டு கீழே போகிருர்.]

ச-மு. ஏமையா ? நாயுடுகாரு, எனக்கு புத்தியில்லையா இண்ணு கேட்டா கூடாவா, லேதண்டி இண்ணு சொல்லச் சொன் னேண்டி ?

தி. லேதண்டி.

சபாபதி சிரித்துக்கொண்டே வருகிறான்.

ச. அந்த வயித்தியர் கிட்ட இருந்து நாலணா தபாய்ச்சிகிணு வந்துட்டேம்பா! உன்னே செவிடு இண்ணு திட்டினாரு; அத்தெ மாமா கிட்ட சொல்லிவிடுவேன் இண்ணா, வாணாம் இண்ணு நாலணா கொடுத்தாரு.

ச-மு. அடே சத்! அத்தெ திருப்பிக் கொடுத்தூடணும் நாளைக்கி—பாவம்.

கிருஷ்ணசாமி ஒரு குடுகுடுப்புக்காரனுடன் வருகிறான்.

கி. அத்தான், மத்தவங்கல்லாம் பூட்டாங்க, இவன் ஒர்த்தன் தான் போகமாட்டேன் இண்ணு ரொம்ப தொந்தரவு பண்றா, இவனுக்கு நீங்கதான் ஏதாவது வழி பண்ணணும்.

குடு. மஹாப்பிரபு!—நல்ல நாளாச்சே—இண்ணைக்கு இல்லெ இண்ணு சொல்லலாமா! குடுகுடு குடு குடு—குடுப் குடுப்! ஐயாவுக்கு செயமுண்டாகணும்!— பெரிய உத்தியோகமாவணும்!—சகல பாக்யமுண்டாகணும்! புள்ளெகுட்டிங்க பொறக்கணும்!—எதிரிங்கல்லாம் ஐயோ இண்ணு பூடணும்! குடு குடுடு—குடுடுப்! குடுப்!—

ச-மு. அடே, எல்லாம் சொல்லியாச்சா இன்னும் என்னமானா இருக்குதா?

குடு. குடுடு குடு குடுப்! குடுப்! மலையாள பகவதி!—திரிலோக மாதா!—திரிபுவனேஸ்வரி!—தயவுனாலே—நல்ல மழை பெய்யப் போவுது! உடனே விவசாயம் விளையப்போவுது—சகல சம்பத் உண்டாகப் போவுது—

ச-மு ஏ! நிறுத்து—மழெ பேயப் போவுது இண்ணையே—மழையும் காணோம் ஒண்ணையும் காணோமே?

குடு. சீக்கிரம் பேயுங்க.—பகவதி வாக்கு—பொய்யாவாதுங்க—

ச-மு. அப்பொ—நான் சொல்றபடி கேளு—எனக்கு பெரிய ஐஸ்வர்யம் வரப்போவுது இண்ணையெ—அது வந்த பிற்பாடு வா—உனக்கு வெகுமதி தர்ரேன்.

குடு. மஹாப்பிரபு— நலல [illegible] ...சமெச !— [illegible] லாச்சே!—இண்ணைக்கு, இல்லெ இண்ர பேச்சி வர கூடாதே! அந்த வாக்கு இண்ணைக்கி—வரக்கூடாது— ஏதாவது ஒரு அம்பத்துண்டு கிஞ்சதுணியும்—ஒரு த பிடியாவது—தங்கக் கையாலெ கொடுத்தனுப்பணும்.

ச-மு சபாபதி, இங்கே வா.

[அவன் காதில் ஏதோ ரகஸ்யமாகச் சொல்லுகிறார், சபாபதி கீழே போகிறான்.]

அடே! குடுகுடுப்! இப்பொ நீ கேட்டபடியே கொடுக்கிறேன். அதுக்கு மேலெ ஒரு வார்த்தையாவது பே னையோ உனக்கு அப்புறம் கல்தாதான்.

குடு. சித்தம்—மஹார்ப்பிரபு—

சபாபதி மறுபடி வருகிறான்.

ச. இந்தா—

[நாலு விரலளவு ஒரு கிழிந்த துண்டும், ஒரு தம்படியு அவனிடம் கொடுக்கிறான். மற்றெல்லோரும் நகைக்கிறார்கள்.]

குடு. மஹாப்பிரபு—தாங்க—லக்ஷ்மி புத்திரர்—இப்டி செய்லாமா?—நல்ல மரியாதே செய்யாப் போறு— இந் இடம் உட்டு—போகமாட்டேனுங்க.

ச-மு. ஆறு சபாபதி—நீ மேல் மெத்தைக்குப்போடா.

[சபாபதி அப்படியே செய்கிறான்]

அடே குடுகுடுப்!— இந்தா, அந்த குடுகுடுப்பெ என் கையிலே கொடு.

குடு. மஹாப்பிரபு—இந்தாங்க.

ச-மு. [அதை வாங்கி அடித்து] குடுகுடுகுடுப்'-இப்பொ நீ உடனே போகாப்போறு— குளோப காரி!— குண்டா கரணி! டமாரபாபி!— டமரக கம்பி!— தயவினாலே— உன் தலை மேலே—மழை பேயப்போவுது!—பேயுது! பேயுது! பேயுது பாரு!

[சபாபதி மேல் மெத்தையிலிருந்து ஒரு சொம்புத் தண்ணீரை குடுகுடுப்புக்காரன் தலையில் கொட்டுகிறான்.]

குடு. அர்ரெ!—இது என்னுங்க!—என் தலெகுட்டை யெல்லாம்—பாழாப் போச்சே!

42627
MARAIMALAI ADIGAL LIBRARY